விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 334 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 02 சனிக்கிழமை (18.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## வடக்கில் சாதனை படைத்தோர்


வனிஷ்கா
196 புள்ளிகள்
(யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை)


தருஜா
196 புள்ளிகள்
(கிளி/மத்திய ஆரம்ப வித்தியாலயம்)


அஸ்விகா
192 புள்ளிகள்
(யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை)

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை மாணவி ஜெராட் அமல்ராஜ் வனிஷ்கா மற்றும் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய மாணவி கிருஷ்ணலிங்கம் தருஜா ஆகியோர் 196 புள்ளிகளைப் பெற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் முன்னிலை பெற்று வட மாகாணத்தில் சாதனை படைத்துள்ளனர்.

▷02

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

யா/புனித ஜோண் பொஸ்கோ → 163 மாணவர்கள் சித்தி

யா/இந்து ஆரம்ப பாடசாலை → 161 மாணவர்கள் சித்தி

(யாழ்ப்பாணம்)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ்ப்பாணத்தில் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் 163 மாணவர்களும் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் 161 மாணவர்களும் வெட்டுப்புள்ளிகளுக்கு மேலாகப் பெற்று சித்தி பெற்றுள்ளனர்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தில் அதிக மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேலாகப் பெற்று சித்தி எய்திய பாடசாலையாக யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் முதன்மை நிலையை தனதாக்கிக் கொண்டுள்ளது.

நடந்து முடிந்த 2023ஆம் ஆண்டிற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் 234 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

அவர்களில் 163 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு

▷15

## யாழில் மாவீரர் நாள்

# நினைவேந்தலை தடை செய்க

## பொலிஸார் வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்) யாழில் மாவீரர் நாள் நினைவேந்தலை தடை செய்யுமாறு பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப்பரிசில் பரீட்சை
## சிறந்த பெறுபேறுகள்

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளுக்கு அமைய 5 மாணவர்கள் 198 என்ற அதி கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளனர் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

புலமைப் பரிசில் பரீட்சை நிறைவடைந்து ஒரு மாத காலத்துக்குள் அதற்கான பெறுபேறு வெளியிடப்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் செயற்பட்ட

▷15

## பாம்பு தீண்டியதில் குடும்பஸ்தர் மரணம்

### கைதடி மத்தியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மனைவியுடன் தோட்டத்தில் புல்லு பிடுங்கிக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் இரத்த புடையன் பாம்பு தீண்டியதில் உயிரிழந்துள்ளார்.

▷15

## மரக்கிளை முறிந்ததில் நெடுந்தீவில் குடும்பஸ்தர் பலி

### தூக்கில் தொங்குவது போன்று மனைவிக்கு பாசாங்கு செய்த வேளை விபரீதம்

(யாழ்ப்பாணம்)

வேப்ப மரக்கிளை முறிந்ததில் நெடுந்தீவில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயரிழந்துள்ளார்.

தூக்கில் தொங்கு

▷15

## தனிச் சிங்களச் சட்டமே நாடு பிளவுபடக் காரணம்

### அமைச்சர் மனுஷ நாணயக்கார



(கொழும்பு)

1956ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தனிச் சிங்கள சட்டமே நாடு இன, மத ரீதியாக பிளவடைய பிரதான காரணமாக காணப்படுவதாக தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார

▷15

## குப்பிளானில் இளைஞன் ஒருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் கிழக்கில் இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த கந்தசுவாமி தர்ஷன் (வயது - 31) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் தனது வீட்டில் நேற்று மதியம் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

இந் நிலையில்

▷15

திருநெல்வேலியில்

## பிக்மி சாரதி மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருநெல்வேலி பகுதியில் பிக்மி சாரதி ஒருவர் மீது முச்சக்கரவண்டி சாரதிகள் ஒன்றுகூடி அச்சுறுத்தல் விடுத்

▷15

## சுழிபுரம் பறாளாய் பகுதியில் பொலிஸார் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பறாளாய் பகுதியில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சுழிபுரம் - பறாளாய் பகுதியில் வசிக்கும் நபர் ஒருவருக்கு நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று பொலிஸார் சிலர் குறித்த நபரை கைது செய்வ

▷15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

திரு. சோ.ஜதுகுலன்

Diploma In Q.S

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் Diploma In Quantity Surveying பட்டம் பெற்றதையிட்டு அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர் :-

திரு.திருமதி சோதிலிங்கம் குடும்பம்

திரு.திருமதி கோகிலன் குடும்பம்

திரு.திருமதி இராகுலன் குடும்பம்

திரு.திருமதி சுஜாந்தன் குடும்பம்

(17907)



## திகதி மாற்றம்

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் 19.11.2023 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த பழைய மாணவர்சங்கப் பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அனைத்துப் பழைய மாணவர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

அங்கத்துவப் படிவங்கள் அன்றையதினம் பிற்பகல் 1.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(C-7661)

அதிபர்

மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம்



# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 01 . 03 . 1949

மறைவு 16 . 11 . 2023

எமது பிரதேச செயலகத்தில் J/413 புலோலி கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி கோகிலன் வாணி அவர்களின் பாசமிகு தாயார்

அமரர்

## கந்தையாபிள்ளை விசாலாட்சியம்மா

அவர்கள் 16.11.2023 அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-7659)

பிரிவுத்துயருடன்....

பிரதேசசெயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச்சங்கம், பிரதேசசெயலகம், பருத்தித்துறை.


# வவு.வில் முதல் இடத்தில் இரு மாணவர்கள்

(வவுனியா)

புலமைப்பரீட்சை பெறுபேற்றில் வவுனியா மாவட்டத்தில் 184 புள்ளிகளைப் பெற்று இரு மாணவர்கள் முதல் நிலை பெற்றுள்ளனர்.

வவுனியா தெற்கு வலயத்தில் ஆச்சிபுரம் அ.த.க பாடசாலை மாணவன் ரவீந்திரதாசன் சரோன் மற்றும் அதே வலயத்தைச் சேர்ந்த தேசிய பாடசாலையான வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன் நவரட்ணம் சகானன்



ஆகியோர் 184 புள்ளிகளைப் பெற்று முதல் நிலை பெற்று மாவட்டத்திற்கு பெருமை சேர்ந்துள்ளனர். (ம-7.250)

## நினைவேந்த...

நாட்டில் பயங்கரவாத அமைப்பாகத் தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் உயிரிழந்தவர்களை நினைவு கூரும் மாவீரர் நாள் நினைவேந்தல் எதிர்வரும் நவம்பர் 27ஆம் திகதி மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வலி. தென்மேற்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் மற்றும் வலி. தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர்களால் நடத்த தடைவிதிக்கக் கோரியே மல்லாகம் நீதிமன்றில் மானிப்பாய் பொலிஸார் மனுத்தாக்கல் செய்தனர்.

இது தொடர்பிலான விசாரணைகள் நேற்று வெள்ளிக்கிழமை (17) மல்லாகம் நீதவான் காயத்திரி சைலவன் முன்னிலையில் நடைபெற்றது.

பொலிஸாரின் விண்ணப்பத்தை நிராகரித்த எதிர்மனுதாரர்களின் சட்டத்தரணிகள், இறந்த உறவினர்களை நினைவு கூறுவது எவ்விதத்திலும் பயங்கரவாத செயலாகாது. பொலிஸாரின் செயற்பாடு கார்த்திகை விளக்கீட்டையும் பயங்கரவாதமாக சித்தரிக்கும்.

பொலிஸாரின் கட்டளை வழங்கப்பட்டால் நவம்பர் 26ஆம் திகதி கார்த்திகை விளக்கீட்டை அனுஷ்டிப்பதில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும். கடந்த காலங்களில் இறந்தவர்களின் நினைவேந்தலை அரசாங்கங்கள் அனுமதித்திருந்தது.

மேலும் கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு நீதிமன்றங்களில் இவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நிராகரிக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டி மானிப்பாய் பொலிஸாரின் தடைக் கோரிக்கையை நிராகரிக்குமாறு கோரினர். விசாரணைகளை அடுத்து விண்ணப்பம் தொடர்பான கட்டளைக்காக எதிர்வரும் நவம்பர் 20ம் திகதி திங்கட்கிழமைக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. எதிர்மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் உள்ளிட்ட பல சட்டத்தரணிகள் ஆஜராகினர். (ம-7)

## வடக்கில் சாத...

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்று முன்தினம் இரவு வெளியாகியது.

கிடைக்கப்பெற்ற பெறுபேறுகளின் அடிப்படையில் வடமாகாணத்தில் யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவி வனிஷ்கா மற்றும் கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய மாணவி தருஜா அகியோர் 196 புள்ளிகளைப் பெற்று முன்னிலையில் உள்ளனர்.

மேலும் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவி அஸ்விகா 192 புள்ளிகளை பெற்று அடுத்த நிலையில் உள் ளார். (ம-7)


## Romania வேலைவாய்ப்பு விசா

**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் - தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**

(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

(C-7660)

**021 222 1265,076 250 0098**



## RAVEENS EMC

KARAVEDDY

Special English for Grade five (5)

(SCHOLARSHIP பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கு)

- 3 Months Course
- Scholarship பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு முன்னுரிமை.
- 2024 இல் Grade 06 இல் English Medium படிப்பவர்களுக்கு உகந்தது.
- விண்ணப்ப பத்திரத்தை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(C-7658)

P.EASWARANATHAN (Director)



## காணி விற்பனைக்கு

பலாலி வீதி தெற்கு புன்னாலைக் கட்டுவன் சந்தியிலிருந்து 500m தூரத்தில் 18 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

- 120 பாக்குமரம் காய்களுடன் உண்டு.
- 20 தென்னை மரங்கள் உண்டு.
- திருமண மண்டபங்கள் அமைக்க உகந்த இடம்.

ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர்பு கொள்ளவும்.

8.00am - 5.00Pm

**076 972 9439**

(17917)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களின் குடியுரிமையை ஜனாதிபதி ரத்து செய்ய வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து



(கொழும்பு)

**பொருளாதார குற்றவாளிகள் என உயர்நீதிமன்றினால் அறிவிக்கப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ உள்ளிட்டவர்களின் குடியுரிமையை இரத்து செய்ய ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.**

பாராளுமன்றில் நேற்று ஆற்றிய உரையின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, அஜித் நிவாட் கப்ரால், பி.பீ. ஜயசுந்தர, டபிள்யு. டி. லக்ஷ்மன், ஆட்டிகல உள்ளிட்ட தரப்பினர் தான், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு காரணம் என உயர்நீதிமன்றம் விசேட தீர்ப்பொன்றை அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக மக்களிடம் கேள்வியொன்று தற்போது எழுந்துள்ளது.

அதாவது நாட்டை வங்குரோத்து நிலை மைக்கு தள்ளிய இந்தத் தரப்பினருக்கு எதிராக ஏன் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று இந்தத் தரப்பினருக்கு இன்னமும் சிவில் உரிமைகளை வழங்குவது தகுதியற்ற விடயம் என்றும் நாட்டின் பெரும்பாலானோர் தற்போது கருதுகின்றனர்.

எனவே, உயர்நீதிமன்றினால் குற்றவாளிகள் என்று அறிவிக்கப்பட்டுள்ள இந்தத் தரப்பினரின் குடியுரிமையை இரத்து செய்யும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

இதுதொடர்பாக ஜனாதிபதி விசேட ஆணைக்குழு ஊடாக நடவடிக்கை எடுக்க வேண்டும். ஜனாதிபதியால் மட்டும்தான் இதற்கான நடவடிக்கையை எடுக்க முடியும்.

எனவே, இந்த குற்றவாளிகளின் குடியுரிமையை இரத்து செய்ய ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என 220 இலட்சம் மக்கள் சார்பாக நான்கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு, இவர்களினால் தொழில் இழந்த, வியாபாரத்தில் நஷ்டமடைந்த, உயிர் இழப்புக்களை எதிர்கொண்ட, வாழ்வாதார சிக்கல்களுக்கு முகம் கொடுத்துள்ள நாட்டின் அனைத்து மக்களுக்கும், இவர்கள் ஊடாக நஷ்ட ஈட்டை பெற்றுக் கொடுக்கும் செயற்பாட்டையும் நாம் சட்டரீதியாக மேற்கொள்ளவுள்ளோம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# மசகு எண்ணெய் விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்று சற்று வீழ்ச்சியை பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 73.20 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

அத்துடன், பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 77.42 அமெரிக்க டொலராக வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 3.66 அமெரிக்க டொலராக நிலவுகிறது. (நி-5-6)

# நிறமூட்டிகளை பயன்படுத்துவது உடலுக்கு தீங்கு விளைவிக்கும்

## பொது சுகாதார ஆய்வாளர்கள் ஒன்றியம் எச்சரிக்கை

(கொழும்பு)

பிரியாணி, ப்ரைட் ரைஸ், இறைச்சி போன்ற உணவுகளுக்கு பல்வேறு நிறமூட்டிகளை கொண்டு பிரகாசமாகவும் கவர்ச்சியாகவும் தயாரிக்கப்படும் உணவுகள் உடலுக்கு தீங்கு விளைவிப்பதாக பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த நிறமிகள் சரியான அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளதா அல்லது அதிக அளவு பயன்படுத்தப்பட்டுள் ளதா என்பதை கண்டறிய சுகாதார அமைச்சு ஆய்வு கூட பரிசோதனை நடத்த வேண்டும் என சங்கத்தின் பொருளாளர் ரோஷன குமார தெரிவித்துள்ளார்.

உணவுச் சட்டம் சந்தையில் பயன்படுத்தப்படும் நிற மூட்டிகளின் அளவைக் கட் டுப்படுத்தும் உட்பிரிவுகளை யும் உள்ளடக்கியுள்ளது. இருப்பினும், ரோஸ்ட் சிக்கன் பிரியாணி மற்றும் ஃப்ரைட் ரைஸ் வகைகள் தயாரிப்பதில் இந்த நிறமூட்டிகளை பயன்படுத்துவது உணவுக் கடைகளில் காணப்படுகிறது. இது தொடர்பில் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் சுகாதார அமைச்சின் உணவுப் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் திலக் சிறிவர்தனவிடம் தெரிவித்தார். (நி-5-6)

# விண்கல் மழையை பார்வையிட இலங்கையர்களுக்கும் வாய்ப்பு

(கொழும்பு)

லியோனிட் விண்கல் மழையின் உச்சத்தை இலங்கையர்களும் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று மற்றும் நாளை இலங்கையர்கள் இதனை காணமுடியும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பௌதீகவியல் பிரிவின் வானியலாளர் ஜானக அதாசூரிய தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, இந்த இரண்டு நாட்களிலும் அதிகாலை 2 மணிக்குப் பிறகு, கிழக்கு அடிவானத்தில் இந்த விண்கல் மழை தென்பட வாய்ப்புள்ளது.

ஒரு மணித்தியாலத்திற்கு 10-15 விண்கற்கள் வரை காணக்கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

# புலமைப்பரிசில் பெறுபேறுகளுக்கான மீள் பரிசீலனை 27 இல் ஆரம்பம்

(கொழும்பு)

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான விடைத்தாள் மீள் பரிசீலனைக்கு விண்ணப்பங்களை ஏற்கும் காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பரீட்சைகள் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில்,

எதிர்வரும் 27ஆம் திகதி முதல் டிசெம்பர் 4ஆம் திகதி வரையில் பரீட்சார்த்திகள் தமது மேன்முறையீட்டை சமர்ப்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்நிலை முறையில் குறித்த விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு இலங்கை பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டுக்கான 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# காணாமல் ஆக்கப்பட்டோர் தென்னிலங்கையிலும் உள்ளனர்

## அவர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்-உதய கம்மன்பில

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனோருக்கு நிவாரணம் வழங்குவதை போன்று தென்னிலங்கைக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பொருளாதார நெருக்கடிக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பொறுப்புக் கூற வேண்டும். இவ்வாறான நிலையில் அந்த அரசாங்கத்தில் அமைச்சு பதவி வகித்தவர்கள் அனைவரும் பொறுப்புக் கூற வேண்டும் என்று குறிப்பிடுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

2024 ஆம் ஆண்டுக்கான



வரவு செலவுத் திட்டம் கற்பனை உலகை வரையறுத்ததாக காணப்படுகிறது. 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் முன்மொழிவுகள் மீண்டும் முன்மொழியப்பட்டுள்ளன.

அரச வருமானத்தையும் தேசிய உற்பத்திகளையும் மேம்படுத்த எவ்வித திட்டங்களும் அறிமுகப்படுத்தப்படவில்லை. போலியான வாக்குறுதிகள் மாத்திரம் மிதமிஞ்சியுள்ளன.

காணாமல் போனோருக்கு நட்டஈடு வழங்க அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனோரது உறவுகளுக்கு நட்டஈடு அல்லது இழப்பீடு வழங்குவதை நாங்கள் எதிர்க்கவில்லை.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமல் போனோருக்கு வழங்கப்படும் நிவாரணம் தெற்கு மாகாணத்துக்கும் வழங்கப்பட வேண்டும்.

தென்னிலங்கையிலும் காணாமல் போனோரது உறவுகள் இன்றும் உள்ளனர் என்பதை ஜனாதிபதி விளங்கிக் கொள்ள வேண்டும்.

நாட்டின் பொருளாதார பாதிப்பை ஆட்சியாளர்கள் விளங்கிக் கொள்ளாமல் இருப்பதை போன்று தொழிற்சங்கங்களும் அறியாமல் இருப்பது கவலைக்குரியது.

தற்போதைய நிலையில் 20 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு கோரி போராட்டத்தில் ஈடுபடுவது முறையற்றது என கம்மன்பில தெரிவித்தார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகக் கிண்ண இறுதிப் போட்டி
# 20 வருடங்களுக்கு பின்னர் ஆஸி - இந்தியா நாளை மோதல்




உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியில் 20 வருடங்களுக்கு பின்னர் இந்தியா - அவுஸ்திரேலியா நாளை மோதவுள்ளன.

50 ஓவர் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகிறது. சொந்த மண்ணில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் இந்தியா, தோல்வியை சந்திக்காமல் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. இரண்டு தோல்விகளை சந்தித்த அவுஸ்திரேலியா நேற்று முன்தினம் தென் ஆபிரிக்காவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

இந்தியா இதுவரை உலகக் கோப்பையில் இதற்கு முன்னதாக மூன்று முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. 1983 இல் கபில்தேவ் தலைமையிலான இந்திய அணி இறுதிப் போட்டியில் வெஸ்ட் இண்டீஸை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

2003ஆம் ஆண்டு கங்குலி தலைமையிலான அணி இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவிடம் தோல்வியடைந்தது. 2011இல் தோனி தலைமையிலான அணி சம்பியன் பட்டம் வென்றது.

இந்த மூன்று உலகக் கோப்பை இறுதிப் போட்டியில், 2003 இல் மட்டுமே அவுஸ்திரேலியாவை எதிர்கொண்டு தோல்வியடைந்தது. அதன்பின் தற்போது 20 ஆண்டுகள் கழித்து அவுஸ்திரேலியாவை இறுதிப் போட்டியில் எதிர்கொள்கிறது.

தற்போது இந்திய அணி சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது. இதனால் இந்தியாவுக்கு வாய்ப்பு அதிகம் என எதிர்பார்க்கப்படுகிறது.

2003 கதைக்களம் தற்போது உருவாகியுள்ளது. இதில் இந்தியா கிளைமாக்ஸை மாற்றி அமைக்கும் என இந்திய ரசிகர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

2003இல் இந்தியா டாஸ் வென்று பந்து வீச்சை தேர்வு செய்தது. முதலில் விளையாடிய அவுஸ்திரேலியா 2 விக்கெட் இழப்பிற்கு 359 ரன்கள் குவித்தது. ரிக்கி பொண்டிங் ஆட்டமிழக்காமல் 140 ரன்கள் விளாசினார். பின்னர் விளையாடிய இந்தியா 39.2 ஓவரில் 234 ரன்னில் சுருண்டு கோப்பையை தவறவிட்டது. சேவாக் 82 ரன்களும், டிராவிட் 47 ரன்களும் சேர்த்தனர். (ம-7)

## இறுதிப்போட்டிக்கு வருகை தருமாறு
# உலகக் கோப்பையை வென்ற கப்டன்களுக்கு பிசிசிஐ அழைப்பு

உலகக் கிண்ண இறுதிப் போட்டியை காண வருகை தருமாறு உலகக் கோப்பையை வென்ற கப்டன்களுக்கு பிசிசிஐ அழைப்பு விடுத்துள்ளது.

உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் இறுதிப்போட்டி அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் நாளை நடக்கிறது. இந்த போட்டியில் இந்தியா - அவுஸ்திரேலியா மோதுகிறது.

இந்தியா லீக் ஆட்டங்களில் சிறப்பாக விளையாடி, நொக்அவுட்டில் சொதப்பும் நிகழ்வு கடந்த காலங்களில் நடைபெற்றது. 2015 இல் அவுஸ்திரேலியாவுக்கு எதிராகவும், 2019-ல் நியூசிலாந்துக்கு எதிராகவும் தோல்வியடைந்திருந்தது. தற்போது அந்த தடையை தகர்த்துள்ளது.

இந்தியா இதுவரை உலகக் கோப்பையில் இதற்கு முன்னதாக மூன்று முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. 1983இல் கபில்தேவ் தலைமையிலும் 2003 ஆம் ஆண்டு கங்குலி தலைமையிலும் 2011-ல் டோனி தலைமையிலும் முன்னேறியது. ஆனால் இதில் 2 முறை மட்டுமே கோப்பையை வென்றது.

உலகக் கோப்பையை இதுவரை வெஸ்ட் இண்டீஸ் (1975) (1979), இந்தியா(1983) (2011), அவுஸ்திரேலியா ((1987), (1999) (2003) (2007) (2015)), பாகிஸ்தான் (1992), இலங்கை (1996), இங்கிலாந்து (2019) ஆகிய அணிகள் வென்றுள்ளன.

இந்நிலையில் இதுவரை உலகக் கோப்பையை வென்ற அனைத்து நாட்டு கப்டன்களும் நடப்பு உலகக் கோப்பை இறுதிப் போட்டியை காண வருமாறு பிசிசிஐ அழைப்பு விடுத்துள்ளது. (ம-7)

# பவர் பிளே ஓவர்களில் இந்தியாவை திணறடிப்போம் மிட்செல் ஸ்டார்க்



ஐசிசி உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் நாளை 19 திகதி நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் மோத உள்ளன.

இந்நிலையில் முதல் ஆட்டத்தில் சந்தித்த இந்தியாவை மீண்டும் இறுதிப்போட்டியில் எதிர்கொள்ள ஆவலுடன் காத்திருப்பதாக அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் மிட்செல் ஸ்டார்க் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த உலகக்கோப்பையில் பவர் பிளே ஓவர்களில் தாமும் ஹேசல்வுட்டும் பெரிய அளவில் விக்கெட்டுகளை எடுக்கவில்லை என்று தெரிவிக்கும் அவர் இம்முறை பைனலில் இந்தியா தடுமாற்றத் துவக்கத்தை பெறும் அளவுக்கு அசத்துவோம் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தொடரின் முதல் ஆட்டத்தில் அவர்களை எதிர்கொண்ட நாங்கள் கடைசியாகவும் எதிர்கொள்வது இந்த உலகக்கோப்பைக்கு நல்ல முடிவாக இருக்கும். பவர்பிளே ஓவர்களை எங்களுக்கு சாதகமான வழியில் கொண்டு வர வேண்டும்.

குறிப்பாக ஜோஸ் மற்றும் நான் இந்த உலகக்கோப்பையில் பவர் பிளே ஓவர்களில் பெரிய அளவில் விக்கெட்டுகளை எடுக்கவில்லை. எனவே இறுதிப்போட்டியில் பவர் பிளேவில் நன்றாக செயல்படுவது சிறப்பாக இருக்கும் என்று கூறியுள்ளார். (ம-7)

# பாடப் புத்தகங்களில் ரோகித் குறித்த பாடம்




இந்திய அணித் தலைவர் ரோகித் சர்மா குறித்த பாடம் இடம்பெற்றுள்ளது. 2023ஆம் ஆண்டு நடைபெற்று வரும் ஒருநாள் உலகக் கோப்பையின் இறுதிப் போட்டிக்கு ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி தகுதிப்பெற்றுள்ளது.

இந்த போட்டி நாளை அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தில் நடைபெறுகிறது. இந்த இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலியாவை இந்தியா எதிர்கொள்கிறது.

உலக கிரிக்கெட்டில் மிகவும் பிரபலமான கிரிக்கெட் வீரர்களில் ஒருவரான ரோகித் சர்மா, கப்டனாக மிகச்சிறப்பாக செயல்பட்டு வருகிறார்.

இந்நிலையில் பாடப் புத்தகத்தில் ரோகித் குறித்தான பாடம் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான புகைப்படம் தற்போது வைரலாகி வருகிறது. (ம-7)

# ஆஸி, தென்னாபிரிக்கா தொடர் ஹர்த்திக் பாண்ட்யா விலகல்

இந்திய அணியின் ஆல்-ரவுண்டர் ஹர்திக் பாண்ட்யா, வங்காளதேஷ் க்கு எதிரான ஆட்டத்தில் பந்தை தடுக்க முயற்சித்த போது இடறிவிழுந்து இடது கணுக்காலில் காயமடைந்தார். காயம் முழுமையாக குணம் அடையாததால் ஹர்திக் பாண்ட்யா உலக கோப்பை தொடரில் இருந்து விலகினார். அவருக்கு பதிலாக பிரசித் கிருஷ்ணா அணியில் சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில் உலகக் கோப்பை தொடர் முடிந்ததும் இந்திய அணி அவுஸ்திரேலியா மற்றும் தென் ஆபிரிக்கா தொடர்களில் விளையாட உள்ளது. இந்த இரு தொடர்களிலும் ஹர்திக் பாண்ட்யா விலகி உள்ளார்.

கணுக்காலில் ஏற்பட்ட காயத்திற்கு அறுவை சிகிச்சை தேவையா இல்லையா என்பது குறித்து மருத்துவர்கள் குழு இன்னும் முடிவெடுக்கவில்லை. மேலும் அவர் 2 மாதங்கள் ஓய்வில் இருக்க மருத்துவர்கள் அறிவுறுத்தி உள்ளனர்.



அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஐந்து இருபது-20 தொடர்களில் இந்திய அணி விளையாடவுள்ளது. இந்த தொடர் வருகிற 23 ஆம் திகதி விசாகப்பட்டினத்தில் தொடங்குகிறது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலுக்கு எதிராக புத்தளத்தில் போராட்டம்




(புத்தளம்)

பாலஸ்தீன் காசா மக்களுக்கு எதிராக இஸ்ரேலியர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் கொடூரத் தாக்குதல் மற்றும்இனப்படுகொலை என்பவற்றை கண்டித்து புத்தளத்தில் நேற்று ஜும்ஆ தொழுகைக்கு பின்னர் பாரிய கண்டன ஆர்ப்பாட்டமும், பேரணியும் இடம்பெற்றது. (நி-5-6)

# பொருளாதாரக் குற்றவாளிகளுடன் பந்துலவையும் சேர்க்க வேண்டும்

## அநுர குமார தெரிவிப்பு



(கொழும்பு)

பொருளாதார குற்றவாளிகள் பட்டியலில் அமைச்சர் பந்துல குணவர்த்தனவையும் சேர்க்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

நேற்று பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ, அஜித் நிவாட் கப்ரால், உள்ளிட்டவர்கள் தான் பொருளாதார குற்றவாளிகள் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தற்போது இன்னொருவரையும் இதில் சேர்க்க வேண்டும். அவர் தான் அமைச்சர் பந்துல குணவர்த்தன.

ஏனெனில், இவர் தான் பொருளாதாரம் தொடர்பாக இந்த பாராளுமன்றில் அதிக தடவை கதைத்துள்ளார்.

எனவே, தனது பெயர் இந்தப்பட்டியலில் இல்லாதமையை நினைத்து பந்துல கவலைடைகிறாரோ தெரியவில்லை.

அத்தோடு, நாடு வங்குரோத்து நிலைமைக்கு சென்றமை தொடர்பாக ஆராய்வதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

ஆனால், உயர் நீதிமன்றின் தீர்ப்போடு இந்தத் தெரிவுக்குழு பயனற்றதாகிவிட்டது.

இதனால், இந்தத் தெரிவுக்குழுவை கலைக்க வேண்டும் என நான் சபாநாயகரிடம் கேட்டுக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# வற்வரி அதிகரிப்பு தற்காலிகமானதே

## நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் வற்வரி அதிகரிக்கப்படுகின்ற போதிலும், அது மின் கட்டணம் உள்ளிட்ட பல துறைகளில் தாக்கம் செலுத்தாது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவான்வெல்ல பகுதியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது, அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமைய, அரச வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் வற்வரியை 18 சதவீதமாக எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், வற்வரி தற்காலிகமாகவே அமுலில் இருக்கும் என்பதால், அது பல்வேறு துறைகளில் தாக்கம் செலுத்தாது என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார். (நி-5-6)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1942 - 11 - 14



இறப்பு 2021 - 12 - 09

திதி-18.11.2023

அமரர். திருமதி. சிவானந்தன் செல்வமலர் (சி-7666)

அன்புடன் வளர்த்து
அறிவையும் பண்பையும் நிறைத்து
வளமான வாழ்க்கையை வளமாக தந்து
வாழ வைத்த அன்புத் தெய்வம்-அம்மா
எமை விட்டு அகலவே
மாட்டீர்கள் என்றிருந்தோம்
எப்படி அம்மா மனம் வந்தது
எமை விட்டுச் செல்ல
ஆண்டுகள் இரண்டு ஆனதம்மா
ஆறவில்லை எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
ஆலடிப்பால கணபதியானை
வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

செல்வமஹால்,அல்வாய்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08.05.1967

மறைவு 09.12.2021

அமரர்.
இராசையா யோகராஜா
(விற்பனை மேற்பார்வையாளர் L.I.C)



திதி -18.11.2023

ஈராண்டு ஓடி மறைந்தாலும் மறையவில்லை
உம் ஞாபகங்கள் நெஞ்சினில்
உம் நினைவை சுமந்து
மனம் தளர்ந்து நிற்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

முருகன் கோவில் வீதி,
புலோலி வடமேற்கு, புலோலி. (சி-7562)

தகவல்-குடும்பத்தினர்.


# இராசிபலன்

18.11.2023
கார்த்திகை 2, சனிக்கிழமை
பஞ்சமி முற்பகல் 10.09 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 1.23 மணிவரை

சுபநேரம் -3.08-4.38 மணிவரை
இராகுகாலம்-9.08-10.38 மணிவரை
கந்தசஷ்டி விரதம் நிறைவு.
சூரசம்காரம்

சந்திராஷ்டமம்-
மிருகசீரிடம்,திருவாதிரை.

வளவன்




தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.




அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன நன்மையுண்டு.




நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், ஊக்கத் தோடும் உற்சாகத் தோடும் செயற்படுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும்.




பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம்,தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள்.




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.




சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உடல் நலனில் அக்கறை கூடும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.




தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




சிறிய வேலையொன்றுக்காக பல முறை அலைய நேரிடலாம், உறவினர்கள் நலன் கருதிய சுப செலவுகள் ஏற்படலாம், பயணத்தால் பலனுண்டு.




மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்,புதிய முயற்சிகளை தள்ளிப்போடுவது நல்லது.




உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம்.




நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.




உற்சாகத்தோடு செயற்படும் நாள், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

வாழ்க்கையில் நீ எந்த இடத்திற்குப் போனாலும் வந்த இடத்தை மறக்காதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் முதலீடு வேண்டுமானால்

## மாகாண சபைகள் முழுமையாக இயங்க வேண்டும்

### சுரேஷ் பிரேமச்சந்திரன்

**(யாழ்ப்பாணம்)**

**புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளைக் கோரி நிற்கும் ஜனாதிபதி மாகாணசபைகளுக்கான அதிகாரங்களை முழுமையாக வழங்குவதற்கு முன்வரவேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**



நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

நாட்டில் புதிய பல்கலைக் கழகங்களை ஆரம்பிக்க புலம்பெயர் தமிழர்கள் முன்வர வேண்டும் என ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளதுடன் தனியார் மற்றும் தனிநிறுவனங்களும் மாகாணசபைகளும் புதிய பல்கலைக்கழகங்களை உருவாக்க முடியும்.

அவ்வாறு புலம்பெயர் தமிழ் மக்களின் முதலீடுகளை உள்வாங்குவதாக இருந்தால் சர்வதேச முதலீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கான அதிகாரங்களை மாகாண அரசுகளுக்கு வழங்க வேண்டுமென்பது முதன்மையானது.

அதுமாத்திரமல்லாமல், ஜனாதிபதி கூறுவது போன்று, பல்கலைக்கழகங்களை உருவாக்குவதற்கான நிலங்களைப் பகிர்ந்தளிப்பது தொடக்கம் முதலீடு செய்ய முன்வருபவர்களுக்கான சகல சலுகைகளையும் வழங்கக் கூடிய அதிகாரங்களும் மாகாணசபைகளுக்கு இருந்தாக வேண்டும்.

பொருளாதாரத்தை வளப்படுத்த, சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட ஒரு தார்மீக சமுதாயம் ஒன்றை உருவாக்கக்கூடிய வகையில் முடிவெடுத்து செயற்படக்கூடிய அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட வேண்டும். இவற்றை விடுத்து வெற்று வார்த்தைகளும் சிங்கள பௌத்த பேரினவாதிகளின் முடிவுகளுக்கு அடங்கிப் போவதுமாக இருந்தால் இந்த நாட்டில் எதனையும் சாதிக்க முடியாது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5-6)

## ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை மாவட்ட/ நீதிவான் நீதிமன்ற வழக்கில் பறிமுதல் செய்யப்பட்ட பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோ, துவிச்சக்கரவண்டிகள், ஆடைகள் (சாறி, சல்வா), கையடக்கத் தொலைபேசிகள், GPS மற்றும் இதர பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த பகிரங்க ஏல விற்பனையில் பொருட்களை கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமாகவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. ஏலத்தில் பொருட்களை கொள்வனவு செய்ய வருபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும் என ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)



தாமரை வாகன சிறிய மயிலில் ஏறி தங்க மாம்பழத்துடன் நல்லூர்க் கந்தன் நேற்று உள் வீதியுலா வந்து பக்தர்களுக்கு காட்சி அளித்தார். (படம்-சிவசாந்தன்)

## அச்சுவேலி தெற்கு கிராம அலுவலருக்கு விருது




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - அச்சுவேலி தெற்கு கிராம அலுவலர் க.அனுஜனுக்கு செம்புல இளங்குருசில் விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்கு பிரதேச செயலகத்தின் பண்பாட்டுப் பெருவிழா கடந்த புதன் கிழமை அமரர். கதிரவேலு கேதீஸ்வரன் அரங்கில் நடைபெற்றது. அதன்போது வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவையினரால் 2023 ஆம் ஆண்டின் "அறிவிப்பாளர்" கலைக்கான "செம்புல இளங்குரிசில்" விருது, அச்சுவேலி தெற்கு கிராம அலுவலர் க.அனுஜனுக்கு வழங்கி வைக்கப்பட்டது. இவ்விருதினை இந்நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட செயலர் அ. சிவபாலசுந்தரன் வழங்கி வைத்தார்.

நிகழ்வில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர், கோப்பாய் பிரதேச செயலாளர், பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேசத்தின் மூத்த, இளங்கலைஞர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (நி-5-6-33)

## மு.வண்டியின் பற்றரி திருடிய நபர் கைது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியில்பற்றரியை திருடிய நபரொருவர் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கந்தசஷ்டி விரத தினத்தை முன்னிட்டு நல்லூர் ஆலயத்திற்கு பெருமளவில் பக்தர்கள் வருகின்ற நிலையில் ஆலய வளாகத்தில் ஆலயத்திற்கு வருகை தந்த பக்தர் ஒருவரின் முச்சக்கர வண்டியில் இருந்து பற்றியை திருடிய நபரை யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினர் கைது செய்யப்பட்டுள்ளதோடு திருடி முச்சக்கர வண்டியின் பற்றரியினையும் மீட்டுள்ளனர்

கைது செய்யப்பட்டவர் காரை நகர் பகுதியை சேர்ந்தவர் எனவும் நீண்ட காலமாக யாழ். மாவட்டத்தில் பல்வேறு நூதனமான திருட்டுகளில் ஈடுபட்டு வருபவர் எனவும் யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வுபிரிவினர் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர் விசாரணைகளின் பின் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவுள்ளார்.(5-6-33)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை பொதுசன நூலகத்தினால் நடத்தப்படம் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளும் பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் யாழ்.மாநகரசபை ஆணையாளர் இ. த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநரின் செயலாளர் மு. நந்தகோபால் கலந்து கொள்ளவுள்ளார். (நி-5-6)

## 10 கிலோ கஞ்சாவுடன் நபரொருவர் கைது

(சாவகச்சேரி)



கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாள் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 10 கிலோ 804 கிராம் கேரளக் கஞ்சாவுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மது ஒழிப்பு விசேட பொலிஸ் செயலணிக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடிப்படையாகக் கொண்டு மேற்படி கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது கஞ்சாவுடன் கைதான சந்தேகநபரை விசேட பொலிஸ் செயலணியினர் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-30)

## வர்த்தக நிலையமொன்றிற்கு பூநகரியில் சீல் வைப்பு

(சாவகச்சேரி)

பூநகரிப் பகுதியில் உணவகங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகளில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் காலாவதியான மற்றும் நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்ட வர்த்தக நிலையமொன்றினை நீதிமன்ற உத்தரவுக்கு அமைய கடந்த புதன்கிழமை சீல் வைத்து மூடியிருப்பதாக பூநகரி சுகாதாரத் தரப்பினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

பூநகரி மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் அண்மையில் பூநகரி வாடியடி மற்றும் ஜெயபுரம் பகுதிகளிலுள்ள உணவகங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் பரிசோதிக்கப்பட்டன.

இதன்போது உணவகம் மற்றும் பல்பொருள் அங்காடி உரிமையாளர்களுக்கெதிராக கிளிநொச்சி நீதிமன்றில் நான்கு வழக்குகள் பூநகரி மற்றும் ஜெயபுர பொது சுகாதாரப் பரிசோதகர்களால் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

வழக்கில் சுகாதார விதிமுறைகளை மீறிய வர்த்தகர்களுக்கு இருபத்தெட்டு குற்றங்களுக்காக ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் தண்டப் பணம் விதிக்கப்பட்டதோடு ஒரு பல்பொருள் அங்காடி நீதிமன்ற உத்தரவுக்கமைய பொதுச்சுகாதார பரிசோதகர்களால் சீல் வைத்து மூடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2030 இல் அனைவருக்கும் ஆங்கிலம்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

2030 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் ஆங்கிலம் என்ற திட்டம் நாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதோடு, அதேபோல் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஆங்கில அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்கு அவசியமான வேலைத்திட்டமும் தயாரிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி பயில மாணவர்களுக்கு சலுகைக் கடன்கள் வழங்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு - பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பணம் இல்லை என்ற காரணத்தால் எந்தவொரு பிள்ளைக்கும் உயர்கல்வி வாய்ப்பு கிடைக்காமல் போய்விடக் கூடாது.

சொத்துக்களை விற்று பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும் யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.



இந்நாட்டு பிள்ளைகளின் உயர்கல்வி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் அரச மற்றும் தனியார் துறைகளில் புதிய பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கவிருப்பதாகவும் அதற்கு பங்களிப்பு வழங்கும் தனியார் துறையினருக்கு குறைவின்றி ஆதரவு வழங்க எதிர்பார்ப்பதாகவும் உறுதியளித்தார்.

நாட்டின் மீது அக்கறை இருக்குமாயின் இந்நாட்டு மாணவர்களின் எதிர்காலத்திற்காக புதிய பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க புலம்பெயர் தமிழ், சிங்கள இலங்கையருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். (நி-5-6)

# நீதிமன்றத்தின் தீர்ப்புகளை விமர்சிக்க எவருக்கும் உரிமையில்லை - ரணதுங்க

(கொழும்பு)

நீதிமன்றத்தின் தீர்ப்புகளை விமர்சிக்க எவருக்கும் உரிமை இல்லை என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிரிக்கெட் நிறுவனம் மற்றும் பொருளாதார நெருக்கடி தொடர்பில் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள் குறித்து எதிர்க்கட்சிகள் இரண்டு வகையாகப் பேசுவதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தமக்கு பாதகமான தீர்ப்புகள் வரும்போது அதை விமர்சிக்கும் எதிர்க்கட்சிகள், தனக்கு சாதகமாக தீர்ப்பு வரும்போது அதை முன்னிலைப்படுத்துகின்றனர்.

அதேவேளை நீதிமன்றத்தின் தீர்ப்புகளை விமர்சிக்க எவருக்கும் உரிமை இல்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி-5-6)

# 2,500 புதிய தாதியர்கள் நியமனம்

(கொழும்பு)

புதிதாக நியமனம் பெற்ற 2 ஆயிரத்து 519 தாதியர்களுக்கு நேற்று நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும், இந்த புதிய ஆட்சேர்ப்புகளுடன் நாட்டின் சுகாதார சேவையில் உள்ள மொத்த தாதியர்களின் எண்ணிக்கை இப்போது 45,000 ஆக அதிகரிக்கும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-5-6)

# 7 வருடங்களின் பின்னர் சாதனை படைத்த கந்தரோடை தமிழ்க் கந்தையா



(யாழ்ப்பாணம்)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் மாணவன் அ.ஆகாஸ் 175 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

7 வருடங்களின் பின்னர் மாணவர் ஒருவர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (5-6)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



*எமது பாடசாலையின் பழைய மாணவனும் ஆசிரியருமாகிய*

**திரு.சுவாம்பிள்ளை இக்னேசியஸ் கிளனி**

BA(Hons) Spl.in Psyhology,
PGDE (Distinction),
Dip. in. counselling (Merit)
Dip.in.Cognitve Method (Credit),
Guidance & Counselling (Merit),
School Mental Health, M.Phil.in Psychology

அவர்கள் 16.11.2023 முதல் இலங்கை அதிபர் சேவை தரம் III இல் நியமனம் பெற்றமையை முன்னிட்டு பாராட்டுவதோடு மேலும் பல பதவி உயர்வுகளைப் பெறவும் வாழ்த்துகின்றோம்.

Best Wishes

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/புனித சாள்ஸ் ம.வி - யாழ்ப்பாணம்.

(17910)


# சீனாவுடனான ஒப்பந்தம் பெரிஸ் கிளப் அமைப்புடன் பகிர்வு - நந்தலால்

(கொழும்பு)

சீனாவின் ஏற்றுமதி, இறக்குமதி வங்கியுடனான ஒப்பந்தம், பெரிஸ் கிளப் அமைப்புடன் பகிரப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். வெளிநாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய, செவ்வியில் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சர்வர்தேச நாணய நிதியத்தின் இலக்குகளின் முன்மொழிவுகளை இந்த ஆண்டு இறுதிக்குள் பெரிஸ் கிளப் முன்வைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (5-6)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யாழ்.ஒஸ்மானியா கல்லூரியில் 5 மாணவர்கள் சித்தி**

5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில்
யாழ்.ஒஸ்மானியா கல்லூரியில்
5 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

| | |
|---|---|
| M.R. ஆதிலா அக்ஸா | - 164 |
| R.ஸஹீம் | - 160 |
| B.A. அம்றா | - 156 |
| M.I. பாத்திமா இஸ்மா | - 149 |
| M.R. அப்துல் முஹ்ஸி | - 148 |

யாழ்.ஒஸ்மானியா கல்லூரியில் 5 மாணவர்கள் ஒரே தடவையில் சித்தியடைந்திருப்பது இதுவே முதல் தடவை என கல்லூரி அதிபர் கௌரவ N.M.Shafie SLPS-1 அவர்கள் தெரிவித்தார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**கலாபூஷணம் பரீட் இக்பால்**


# கரைச்சி பிரதேச சபை-கிளிநொச்சி
# 2024 ஆம் ஆண்டுக்கான வரைவு வரவு-செலவுத்திட்டம் பொதுமக்கள் பார்வைக்கு

கரைச்சி பிரதேச சபையின் 2024 ஆம் ஆண்டுக்கான வரைவு வரவு செலவுத்திட்டம் பொதுமக்கள் பார்வைக்காக 2023.11.16 ஆம் திகதி தொடக்கம் 2023.11.30 ஆம் திகதி வரை கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகம், உப அலுவலகம் கிளிநொச்சி, உப அலுவலகம் முரசுமோட்டை மற்றும் சபையின் நூலகங்களான கிளிநொச்சி, வட்டக்கச்சி, முரசுமோட்டை, ஸ்கந்தபுரம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருமானங்கள், செலவினங்கள் தொடர்பான விபரங்களும், மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதால் பொதுமக்கள் பார்வையிட்டு அபிப்பிராயங்கள் இருப்பின் செயலாளர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ 2023.11.30 ஆம் திகதிக்கு முன்னர் தெரிவிக்க முடியும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**வரைவு வரவு செலவுத்திட்ட சுருக்க அறிக்கை**

| | | |
|---|---|---|
| **வருமானம்** | | |
| சபையின் சொந்த வருமானம் | 318,997,068.00 | |
| மானியங்கள் மற்றும் மீள்நிரப்பல்கள் | 85,210,325.00 | |
| மொத்த வருமானம் | | 404,207,393.00 |
| **செலவினம்** | | |
| மீண்டுவரும் செலவினம் | 194,781,925.00 | |
| மூலதன செலவினம் | 209,425,136.00 | |
| மொத்த செலவினம் | | 404,207,061.00 |

**செயலாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(C-7657)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## கனடா-இந்தியா இடையிலான முரண்பாட்டு நிலை தீவிரம்



(ஒட்டாவா)

கனடாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான முரண்பாட்டு நிலை உக்கிரமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவுடனான வர்த்தக உறவுகள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தப்படாது என கனடா தெரிவித்துள்ளது.

இருநாடுகளுக்கும் இடை யிலான ராஜதந்திர முறுகல் நிலை நீடித்து வருகின்றது

அண்மையில் கனடாவில் படுகொலை செய்யப்பட்ட சீக்கிய மதத் தலைவர் ஹார்தீப் சிங் நிஜார் தொடர்பிலான விசாரணைகளுக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

கனடிய வர்த்தக விவகார அமைச்சர் மேரி நக் இந்த இந்த நிபந்தனையை விதித்துள்ளார்.

நிஜார் கொலை குறித்த விசாரணைகளுக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கும் வரையில் வர்த்தக பேச்சு வார்த்தைகளுக்கு இடமில்லை என அவர் தெரிவித்துள்ளார் அமெரிக்காவில் ஊடகவியலாளர்களிடம் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

நிஜாரின் படுகொலையின் பின்னணியில் இந்திய முகவர்களுக்கு தொடர்பு இருப்பதாக கனடா பகிரங்க குற்றச்சாட்டு சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## பறிபோகும் நெதன்யா...

## இஸ்ரேலில் வெடித்...



(ஜெருசலேம்) –

போர் முடியும் ...

என்று குறிப்பிட்ட ...

பதவி நீக்க வேண்...

வலியுறுத்தியுள்ள...

காசா போருக்கு பிறகு இஸ்ரேலின் பிரதமராக தொடர்ந்து நெதன்யாகு இருக்க மாட்டார் என்று ஜோர்தானின் பிரபல பத்திரிகை செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது. இதனை உறுதி செய்யும் வகையில் இஸ்ரேலில் உள்நாட்டு குழப்பங்கள் வெடித்துள்ளன.

அந்த நாட்டின் சேனல் 12 இற்கு பேட்டி அளித்துள்ள யாயிர் லாபிச், "ஆளும் லிகுய்ட் கட்சி சார்பில் புதிய பிரதமரை தெரிவு செய்ய வேண்டும். அவருக்கு எங்கள் கட்சி முழு ஆதரவை தெரிவிக்கும். யார் புதிய பிரதமர் என்பதை அக்கட்சியே முடிவு செய்யட்டும். அதில் நாங்கள் தலையிட விரும்பவில்லை. தற்போதைக்கு தேர்தல் தேவையில்லை. ஒக்டோபர் 7 தாக்குதலின் பிறகு நெதன்யாகு மக்களின் நம்பிக்கையை

### இஸ்ரேல் ஒரு பயங்கரவாத நாடு

## துருக்கி ஜனாதிபதியின் கருத்துக்கு நெதன்யாகு கண்டனம்

(அங்காரா)

ஒரு மாதத்திற்கும் மேலாக இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் நீடித்து வருகின்ற நிலையில் 11 ஆயிரம் பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளதுடன் 2,700 பேர் காணாமல் போயுள்ளனர்.-

இஸ்ரேலில் 1,200 பேர் உயிரிழந்துள்ளதுடன் 240 பேர் இஸ்ரேலில் இருந்து காசாவுக்கு பணயக் கைதிகளாக பிடித்து செல்லப்பட்டுள்ளனர். தற்போது அவர்களை மீட்கும் பணியில் இஸ்ரேல் பாதுகாப்புப் படை ஈடுபட்டு வருகிறது.

இதனிடையே காசாவில் உள்ள அல்ஷிபா மருத்துவமனையில் ஹமாஸ் அமைப்பினர் பதுங்கி இருப்பதாக இஸ்ரேல் குற்றம்சாட்டி வருகிறது. அத்துடன் அந்த மருத்துவமனை மீது

## அல்ஷிஃபா மருத்துவமனை மீது 24 மணிநேரத்தில் இருமுறை தாக்குதல்



(காசா)

இஸ்ரேலியப் படைகள் காசா நகருக்கு மேற்கே உள்ள அல்ஷிஃபா மருத்துவ வளாகத்தின் மீது 24 மணிநேரத்தில் இரண்டாவது முறையாகத் தாக்கியதாக அதன் உள்ளேயே இருந்ததாக பாலஸ்தீன அதிகாரபூர்வ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய புல்டோசர்கள் மற்றும் டாங்கிகள் மருத்துவ வளாகத்தை அதன் மேற்கு நுழைவாயிலில் இருந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதாக உள்ளூர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலிய படையினர் கடந்த ஒரு வாரமாக அல்ஷிஃபா மருத்துவமனையை இராணுவ டாங்கிகளுடன் சுற்றி வளைத்து வருகின்றன. கடந்த புதன்கிழமை இரவு, இஸ்ரேலிய படைகள் அல்ஷிஃபா மருத்துவ வளாகத்திற்குள் இருந்து அதிகாலை வேளை அங்கிருந்து வெளியேறின.

எனினும், அல்ஷிஃபா வைத்தியசாலைக்குள் இருந்து செய்திகளை வழங்கும் நிருபர். இஸ்ரேலிய டாங்கிகள் மற்றும் குறி பார்த்து சுடும் வீரர்கள் சுற்றியுள்ள கட்டடங்களில் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர் எனவும் கூடுதலாக ட்ரோன்கள் தொடர்ந்து மேலே பறக்கின்றன என தெரிவித்துள்ளார்.

நோயாளிகள் மற்றும் மருத்துவ ஊழியர்கள் இருந்த புதிய அறுவைசிகிச்சை கட்டடம் மற்றும் அவசரகால கட்டடத்தை இஸ்ரேலிய படைகள் தாக்கியதாகவும் செய்தியாளர் தெரிவித்தார்.

இஸ்ரேலியப் படைகள் பல இடம்பெயர்ந்த நபர்களையும் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்தவர்களின் குடும்பத்தினரையும் கைது செய்து அவர்களை விசாரித்து, சித்திரவதை செய்து, அவர்களை பல மணிநேரம் முற்றங்களில் தடுத்து வைத்தனர். முற்றத்தில் உள்ள இறந்தவர்களை அடக்கம் செய்வதையும் தடுத்து வருவதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (நி-5-6)

## பூமியின் வளிமண்...

## சந்திரயான் -3 விண்...

### இஸ்ரோ அறிவிப்பு



(டில்லி)

சந்திரயான்-3 விண்கலத்தின் ஒரு பகுதி மீண்டும் பூமியின் வளிமண்டலத்தில் நுழைந்துள்ளதாகவும் அது வடக்கு பசுபிக் பெருங்கடலில் விழக்கூடிய வாய்ப்பு உள்ளதாகவும் இஸ்ரோ அறிவித்துள்ளது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் இஸ்ரோ ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து சந்திரயான்-3 ஐ அனுப்பியது.

புவி வட்டப்பாதை, நிலவு வட்டப்பாதையை கடந்து, செப்டெம்பர் மாதம் 23 ஆம் திகதி மாலை 6.04 மணி அளவில் விண்கலத்தில் இருந்த விக்ரம் லேண்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ாகுவின் பிரதமர் பதவி
# ந்த அரசியல் குழப்பம்

)

**ம் வரை நெதன்யாகு பிரதமர் பதவியில் தொடர்வார் ட்ட நிலையில் தற்போது நெதன்யாகுவை உடனடியாக ண்டும் என பிரதான எதிர்க்கட்சி தலைவர் யாயிர் லாபிச் ள்ளார்.**

இழந்து விட்டார். அப்படிப்பட்ட நபரின் தலைமையில் இந்த போரை நாங்கள் சந்திக்க விரும்பவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள ஆளும் நெதன்யாகுவின் லிகுய்ட் கட்சி எதிர்க்கட்சி தலைவர் விடுத்துள்ள அறிக்கை சோகத்தையும் சங்கடத்தையும் ஏற்படுத்துகிறது. இந்த போரை தலைமை ஏற்று நடத்தி வரும் பிரதமரை பதவியில் இருந்து அகற்ற வேண்டும் என்று சொல்வதன் மூலம் யாயிர் லபீச் போர்க்காலத்தில் அரசியல் செய்துள்ளார்" என்று குற்றம் சாட்டியுள்ளது. இவ்வாறு நாட்டுக்குள் நடக்கும் இந்த குளறுபடி சண்டை காசாவில் உயிரை கையில் பிடித்துக் கொண்டு போர் செய்யும் இஸ்ரேல் வீரர்களை சங்கடத்தில் ஆழ்த்தியுள்ளது. (நி-5-6)

ஏவுகணை தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில் துருக்கிஜனாதிபதி எர்டோகன் செய்தியாளர்கள் சந்திப்பின் போது, "ஒரு நகரத்தையும் அதன் மக்களையும் முழுமையாக அழிக்கும் நடவடிக்கையை இஸ்ரேல் மேற்கொண்டு வருகிறது. இஸ்ரேல் ஒரு பயங்கரவாத நாடு என்பதை தெளிவாகவும் வெளிப்படையாகவும் கூறுகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

மேலும் காசாவில் கொடூரமான தாக்குதல்களை நடத்திய இஸ்ரேலின் அரசியல் மற்றும் இராணுவ தலைவர்கள் சர்வதேச நீதிமன்றத்தில் நிச்சயம் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை எர்டோகனின் கருத்துக்கு இஸ்ரேல் ஜனாதிபதி நெதன்யாகு கடும்கண்டனம்தெரிவித்துள்ளார். பயங்கரவாதத்தை ஆதரிக்கும் சில சக்திகள் இருக்கின்றன. குறிப்பாக துருக்கி ஜனாதிபதி எர்டோகன், இஸ்ரேலை பயங்கரவாத நாடு என்று கூறுகிறார். ஆனால் துருக்கிகிராமங்கள் மீது குண்டு வீசி தாக்குதல் நடத்திய ஹமாஸ் பயங்கரவாதிகளை ஆதரிக்கிறார். இவர்களிடம் இருந்து எந்த அறிவுரையும் எங்களுக்கு தேவையில்லை என்று தெரிவித்துள்ளார். (நி-5-6)

## காசாவில் உடல்களை கைகளால் தோண்டி எடுக்கும் அவலம்



(காசா)

காசாவில் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி பலர் உயிரிழந்த நிலையில் அங்கு துர்நாற்றம் வீச ஆரம்பித்துள்ளது. அதனால் உடல்களை கைகளால் தோண்டி எடுக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது.

உடல்கள் அழுகி துர்நாற்றம் வீசுவதை சகித்துக் கொண்டு எப்படியாவது உறவினர்களின் உடல்களை மீட்க வேண்டும் என பொது மக்கள் பரிதவித்து வருகின்றனர்.

ஹமாஸ் பயங்கரவாதிகள் கடந்த ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி, யாரும் எதிர்பார்க்காத வகையில் இஸ்ரேல் எல்லைக்குள் புகுந்து அதிரடி தாக்குதல் நடத்தினர்.

இதனையடுத்து வெகுண்டெழுந்த இஸ்ரேல் காசா மீது இராணுவ நடவடிக்கையை தொடங்கியது.

இடைவிடாத இஸ்ரேல் படையினரின் வான்தாக்குதலுக்கு உள்ளான காசா உருக்குலைந்துள்ளது. எங்கு பார்த்தாலும் கட்டட இடிபாடுகளாக காட்சியளிக்கின்றன.

இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தவர்களின் உடல்களை உறவினர்கள் மீட்க முடியாமல் திணறி வருகிறார்கள். ஜே.சி.பி. போன்ற கனரக வாகனங்கள் எரிபொருள் இல்லாமல் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலானோர் இரும்பு கம்பிகளை கொண்டு இடிபாடுகளை நீக்கி வருகிறார்கள். பலர் எந்தவித உதவிப் பொருட்களும் இல்லாததால், கைகளால் இடிபாடுகளை அப்புறப்படுத்தி உடல்களை வெளியே எடுக்கும் அவல நிலை அங்கு ஏற்பட்டுள்ளது. (நி-5)

# ணடலத்தில் நுழைந்த
# ண்கலத்தின் ஒரு பகுதி

40 நாட்கள் வெற்றி பயணத்தை முடித்து கொண்டு நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கி ஆய்வு பணிகளில் ஈடுபட்டது.

அதன் மூலம் கிடைத்த பல்வேறு தரவுகள் மற்றும் புகைப்படங்களை எடுத்து பெங்களூரில் உள்ள தரை கட்டுப்பாட்டு மையத்திற்கு அனுப்பி வைத்தது.

மேலும், நிலவின் தென் துருவத்தை ஆராயச் சென்ற முதல் நாடு என்ற சாதனையையும் அங்கிருந்து ஆய்வு செய்து தரவுகளை நாட்டுக்கு அனுப்பிய சாதனையையும் இந்தியா படைத்திருந்தது.

அதைத்தொடர்ந்து விக்ரம் லேண்டரில் இருந்து பிரக்யான் ரோவர் வெளியேறி நிலவில் பல ஆய்வுகளை மேற்கொண்டது.

இதுதொடர்பான காணொளிகள், படங்களை இஸ்ரோ தனது டுவிட்டர் பக்கத்தில் அடிக்கடி பதிவிட்டு வந்தது. சந்திரயான்-3 திட்டமும் வெற்றி அடைந்தது.

இதுதொடர்பாக, இஸ்ரோ வெளியிட்டுள்ள அறிக்கையில், சந்திரயான்-3 ராக்கெட்டின் ஒரு பகுதி மீண்டும் பூமியின் வளி மண்டலத்தில் நுழைந்தது என தெரிவித்துள்ளது.

விண்கலம் ஏவப்பட்ட 124 நாட்களுக்குள் ராக்கெட் பாகம் பூமியின் வளிமண்டலத்தில் நுழைந்துள்ளது. கடந்த புதன்கிழமை மதியம் 2.42 மணியளவில் பூமியின் காற்று மண்டலப் பகுதிக்குள் நுழைந்தது.

புவி மண்டல பகுதிக்குள் வந்த ராக்கெட் பாகம், பூமியின் ஈர்ப்பு விசையால் இழுக்கப்பட்டு விழுந்திருக்கலாம் எனவும் வடக்கு பசுபிக் பெருங்கடலில் ஏவுகணை விழக்கூடிய புள்ளி கணிக்கப்பட்டது எனவும் தெரிவித்துள்ளது. (நி-5-6)

# கனடா பிரதமரை சூழ்ந்து கொண்ட பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள்

## உணவகமொன்றிற்கு சென்ற வேளை பரபரப்பு

(ஒட்டாவா)

கனடாவில் உணவகம் ஒன்றில் இரவு உணவருந்தச் சென்ற கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை, பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் சூழ்ந்து கொண்ட விடயம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, கடந்த செவ்வாய்க் கிழமை இரவு வான்கூவரிலுள்ள உணவகம் ஒன்றிற்கு உணவருந்தச் சென்றுள்ளார்.

அப்போது, பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் உணவகத்துக்குள் நுழைந்து ட்ரூடோவை சுற்றிவளைத்துள்ளனர்.

உடனே போர் நிறுத்தம் வேண்டும், ஜஸ்டின் ட்ரூடோ, உங்கள் கைகளில் இரத்தக் கறை உள்ளது,



நீங்கள் ஒரு கொலைகாரர், எங்களுக்கு பதில் சொல்லுங்கள் என்றெல்லாம் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

வான்கூவர் உணவகத்திலிருந்து ட்ரூடோ வெளியேறியதும், பொலிஸார் கூட்டத்தைக் கலைக்க முயன்றுள்ளார்கள்.

அப்போது, 27 வயது நபர் ஒருவர் பெண் பொலிஸார் ஒருவரை முகத்தில் குத்திக் காயப்படுத்தியதுடன் அவரது கண்களை விரல்களால் குத்திக் காயப்படுத்தியுள்ளார்.

அவரும், பொலிஸாரை பணி செய்யவிடாமல் தடுத்த 34 வயது நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக வான்கூவர் பொலிஸார் தெரிவித்துள்ளார்கள். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை தடம்புரள அரசியல் தலையீடே காரணம்

(கொழும்பு)

உயிர்த்தஞாயிறு குண்டு வெடிப்பு 'விசாரணையை கடந்த அரசாங்கமே நாசப்படுத்தியது என ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் ரவி செனவிரத்ன குற்றம்சாட்டியுள்ளார்.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் வெளிநாட்டவர்கள் உட்பட 269 பேர் கொல்லப்பட்ட அதேநேரம் சுமார் 500 பேர் காயமடைந்தனர்.

தேசிய பாதுகாப்பிற்கு நெருக்கடியை ஏற்படுத்தி ஆட்சியை பிடிக்கும் சதித்திட்டத்தின் ஒரு பகுதியாக தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர்களை உளவுத்துறை உயர் அதிகாரி ஒருவர் சந்தித்தார் என அசாத் மௌலானா சனல் 4 இற்கு தெரிவித்த கருத்து பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் குண்டு வெடிப்பு தொடர்பான விசாரணை தடம்புரண்டமைக்கு அரசியல் தலையீடே காரணம் என முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு அம்பலப்படுத்தியுள்ளார்.

குண்டுவெடிப்பு நடந்து 6 மாதங்களுக்குப் பிறகு ராஜபக்ஷ பதவியேற்றதும் அவரது தரப்பினர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டதாகவும் புதிய அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே அந்த நேரத்தில், ஒரு பிரதமரோ அல்லது அமைச்சரவை கூட நியமிக்கப்படவில்லை.

தொடர்ந்து வந்த மாதங்களில் மேலும் 22 அதிகாரிகள் விசாரணையில் இருந்து நீக்கப்பட்டனர் என்றும் தனது கட்டளையின் கீழ் இருந்த 700 இற்கும் மேற்பட்ட குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளுக்கு வெளிநாட்டுப் பயணத் தடையையும் அரசாங்கம் விதித்தது என்றும் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

# மாலைதீவு ஜனாதிபதியுடன் ரணில் சந்திப்பு



(மாலைதீவு)

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாலைதீவு ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் சோலிஹ்ஹை நேற்று முன்தினம் வியாழக்கிழமை சந்தித்து கலந்துரையாடினார்.

அண்மையில் இடம்பெற்ற மாலைதீவு ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் சோலிஹ்விற்கு எதிராக எதிர்க்கட்சி வேட்பாளர் மொஹமட் முய்சு போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

மாலைதீவுக் குடியரசின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட கலாநிதி மொஹமட் முய்சுவின் பதவியேற்பு விழாவில் கலந்துகொள்வதற்காகவே ஜனாதிபதி ரணில் மாலைதீவு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 320 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 240 |
| பச்சைமிளகாய் | 450 | 600 | 500 | 600 |
| தக்காளி | 320 | 380 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 120 | 150 |
| கோவா | 300 | 300 | 260 | 400 |
| கரட் | 350 | 400 | 420 | 500 |
| பூசணி | 100 | 100 | 70 | 120 |
| புடோல் | 250 | 200 | 200 | 250 |
| வாழைக்காய் | 200 | 200 | 140 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 350 | 500 |
| பெரிய வெங்காயம் | 300 | 240 | 260 | 300 |
| பாகற்காய் | 500 | 500 | 380 | 800 |
| வெண்டக்காய் | 250 | 200 | 160 | 400 |
| கருணைக் கிழங்கு | 160 | 100 | 140 | 200 |
| பயற்றங்காய் | 800 | 450 | 400 | 600 |
| லீக்ஸ் | 300 | 250 | 240 | 300 |
| பீற்றூட் | 250 | 240 | 160 | 300 |
| கறிமிளகாய் | 600 | 800 | 520 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 350 | 800 |
| போஞ்சி | 400 | 480 | 340 | 600 |
| கத்தரிதம்புள்ள | 300 | 250 | 280 | 320 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 120 | 150 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1200 | 1500 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 75 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 450 | 450 | 500 |
| வெங்காயப்பூ | --- | --- | --- | --- |
| முள்ளங்கி | 100 | 200 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 120 | 60 |
| வல்லாரை | 40 | 35 | 50 | 50 |
| ஈரப்பலா | 200 | 200 | 80 | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2968

நதிஸ்




யுவதசன்




மிதுளன்




கார்த்திகா




நிலானி




சாமந்தி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் புதிய பட்ஜெட் மக்களை சென்றடையுமா?

## செல்வம் எம்.பி கேள்வி

(மன்னார்)

**இந்த வரவு -செலவு திட்டம் என்பது பார்வைக்கு நன்றாக இருந்தாலும் அழகாக இருந்தாலும் அது எங்கள் மக்களை சென்றடையுமா அல்லது இந்த பத்தாயிரம் வரிகட்டுவதற்கே சரியாகிவிடுமா என்ற கேள்விகள் இருப்பதாகவும் மொத்தத்தில் இந்த பட்ஜெட் ஒரு அழகான காகிதப் பூ மாத்திரமே என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.**

நேற்று மன்னாரில் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போது கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

காணாமல் போன உறவுகளுக்கு கொடுக்கின்ற தொகை உயர்த்தப்பட்டிருக்கின்றது என பாராளுமன்றில் ஜனாதிபதி அண்மையில் வாசித்தார்.

என்னை பொருத்தமட்டிலே அதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் அந்த மக்கள் போரிலே தங்களுடைய உறவுகளை கண்முன்னாலே ஒப்படைத்து பல வருடங்களாக போராடிக்கொண்டு இருக்கின்ற மக்களாக இருக்கிறார்கள்.

அந்த மக்களின் பிரச்சினைகளை நிவாரணத்தின் மூலம் நிவர்த்தி செய்யலாம் என்பது ஏற்றுக்கொள்ள முடியாது. (நி-5-6)



# குடிமனைக்குள் புகுந்த வெள்ளம் அகற்றும் நடவடிக்கை தீவிரம்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் தொடர்ச்சியாக பெய்த கன மழையால் வீதிகளில் நீர் தேங்கி நின்று வர்த்தக நிலையங்கள், பாடசாலை, வீடுகளுக்குள் புகுந்தமையால் மக்களின் அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்தது.

தற்பொழுது நிலவும் சீரற்ற காலநிலையால் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. இதனால் புதுக்குடியிருப்பு நகரில் பாரிய அளவில் நீர் தேங்கி பாரிய அழிவுகளை அப்பகுதி சார் வர்த்தகர்களிற்கு, பாடசாலைகளிற்கு, மக்களிற்கு ஏற்படுத்தியுள்ளது. இதனால் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளும் வர்த்தகர்களும் அப்பகுதி மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தினர், புதுக்குடியிருப்பு பிரதேச சபையினர், பொலிஸார் இணைந்து புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் வாய்க்காலினை நீர் வடிந்து ஓடும் படி சீர் செய்து வருகின்றனர். (5-6-299)

# புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ். பொதுசன நூலகமும் உள்ளூர் புத்தக சாலைகளும் இணைந்து நடத்தும் கண்காட்சியும் விற்பனையும் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், புத்திஜீவிகள், வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க யாழ்.மாநகர சபையின் ஆணையாளரின் அனுமதியுடன் இன்று மற்றும் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என யாழ்.மாநகரசபை பொதுசன நூலக பிரதம நூலகர் தெரிவித்துள்ளார்.

குறித்த கண்காட்சி காலை 9 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# சட்டவிரோதமாக மாடுகள் கடத்திய இருவர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் சட்டவிரோதமான முறையில் கடத்திச் செல்லப்பட்ட மாடுகளுடன் இரு வரை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் மடுக்கந்தை பகுதியில் இருந்து வவுனியா நகர் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த சிறியரக லொறி ஒன்றினை வழிமறித்த விசேட அதிரடிப் படையினர் அதில் சோதனையினை முன்னெடுத்தனர்.

இதன்போது சட்டவிரோதமான முறையில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் மாடுகள் கடத்தியது தொடர்பில் குறித்த வாகனத்தில் இருந்தவர்களை கைது செய்ததுடன் வாகனத்தையும் பறிமுதல் செய்து விசேட அதிரடிப் படையினர் விசாரணைகளுக்காக அவர்களை வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

வாகனத்தில் இருந்து 8 பசு மாடுகள் உட்பட 14 மாடுகள் பொலிஸாரால் மீட்கப்பட்டதுடன், அவற்றை கடத்திச் செல்வதற்காக பயன்படுத்தப்பட்ட லொறியும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6-250)



ஹாட்லியின் மைந்தர்களது 24 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பருத்தித்துறை இன்பர்சிட்டி கடற்கரையில் நேற்று வெள்ளிக்கிழமை சுடரேற்றி அனுஷ்டிக்கப்பட்டது.

(படம்:-மகாலிங்கம்)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில் காணப்படும் பாவனையில் இல்லாத அலுவலக தளபாடங்கள், கணனி உபகரணப்பொருட்கள் மற்றும் பாவிக்கமுடியாத/ பாவனைக்குத் தேவைப்படாத பொருட்களை பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏலவிற்பனைக்குரிய பொருட்கள் தொடர்பான விபரங்களை பல்கலைக்கழக பொதுநிர்வாகக் கிளையுடன் தொடர்புகொண்டு பின்வரும் தினங்களில் காலை 10.00 மணியிலிருந்து மாலை 02.00 மணிவரை குறித்த நாட்களில் பார்வையிடலாம்.

| இல | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஏலப்பொருட்கள் | ஏலப்பொருட்களை பார்வையிடும் நாட்கள் | ஏலவிற்பனை நடைபெறும் திகதி / காலம் |
|---|---|---|---|---|
| 01 | பல்கலைக்கழக பிரதான வளாகம் | • கணனி உபகரணப் பொருட்கள்<br>• தளபாடங்கள்<br>• ஆய்வுகூடப்பொருட்கள் | 28.11.2023<br>29.11.2023 | 01.12.2023<br>வெள்ளிக்கிழமை<br>மு.ப. 10.00 மணி |

ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்புவர்கள் மீளளிக்கப்படாத அனுமதிக் கட்டணமாக **ரூபா 2000.00 ஐ** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் **97000060000276** என்ற கணக்கிலக்கத்திற்கு நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், என்ற பெயரில் வைப்புச்செய்த பற்றுச்சீட்டுடன் ஏலப்பொருட்களை பார்வையிடலாம்.

ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர்கள் பொருட்களைப் பார்வையிட்ட பின்னர் மீளளிப்பு செய்யக்கூடிய வைப்புத் தொகையாக **ரூபா 15,000.00 ஐ** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் **97000440002612** என்ற கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து செலுத்திய பற்றுச்சீட்டினை 28.11.2023 மாலை 4.00 மணிக்கு முன்னர் நிர்வாகக்கிளையில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து மேற்குறித்த ஏலவிற்பனையில் கலந்து கொள்ளமுடியும்.

மேற்காட்டிய திகதியில் நடைபெறும் ஏலவிற்பனையில் வெற்றியடைந்தவர்கள் ஏலத்திற்குரிய தொகையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையில் **97000440001846** என்ற கணக்கிலக்கத்திற்கு பணமாக உடன் செலுத்தி குறித்தொதுக்கப்பட்ட தினங்களுக்குள் பொருட்களை முழுமையாக அகற்றுதல் வேண்டும்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(C-7656) **18.11.2023**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ஆனால் அரண்மனைப் பெண்டிர் அமர்ந்திருந்த இடத்தில் மட்டும் மெல்லிய குரலில் இருவர் பேசும் சத்தம் எழுந்தது: பழுவூர் இளையராணி நந்தினி குந்தவையை நெருங்கி உட்கார்ந்து "தேவி! முன்னொரு காலத்தில் சம்பந்தப் பெருமான் இந்தப் பாடலைப் பாடித் திருநீறு இட்டுப் பாண்டிய மன்னரின் நோயைத் தீர்த்தாரல்லவா? இப்போது ஏன் இந்தப் பாடலுக்கு அந்தச் சக்தி இல்லை? பாடலுக்குச் சக்தியில்லாவிட்டாலும் திருநீற்றுக்கும் சக்தி இல்லாமற் போய் விட்டதே? மருந்து, மூலிகை, மருத்துவர், மருத்துவசாலை, இவ்வளவும் இல்லாமல் இக்காலத்தில் முடியவில்லையே?" என்று கேட்டாள்.

"ஆம் ராணி! அந்த நாளில் உலகில் தர்மம் மேலோங்கியிருந்தது. அதனால் மந்திரத் திருநீற்றுக்கு அவ்வளவு சக்தியிருந்தது. இப்போது உலகில் பாவம் மலிந்துவிட்டது. அரசருக்கு விரோதமாகச் சதி செய்யும் துரோகிகள் நாட்டில் ஏற்பட்டிருக்கிறார்கள். இப்படியெல்லாம் முன்னே நாம் கேட்டதுண்டா? ஆகையால்தான் மந்திரத்தின் சக்தி குறைந்து மருந்து தேவையாகி விட்டது!" என்று இளைய பிராட்டி கூறிப் பழுவூர் இளைய ராணியின் முகத்தை உற்றுப் பார்த்தாள்.

நந்தினியின் முகத்தில் எவ்வித மாறுதலையும் காணவில்லை. "அப்படியா? அரசருக்கு விரோதமாகச் சதிசெய்யும் துரோகிகள் இந்த நாளில் இருக்கிறார்களா? அவர்கள் யார்?" என்று சாவதானமாகக் கேட்டாள்.

"அதுதான் எனக்கும் தெரியவில்லை. சிலர் ஒருவரைச் சொல்கிறார்கள் சிலர் இன்னொருவரைச் சொல்கிறார்கள். எது உண்மை என்று கண்டுபிடிப்பதற்காக இன்னும் சில நாள் இங்கேயே இருக்கலாமென்று பார்க்கிறேன். பழையாறையில் இருந்தால் உலக நடப்பு என்ன தெரிகிறது?" என்றாள் குந்தவை.

"நல்ல தீர்மானம் செய்தீர்கள். என்னைக் கேட்டால் இங்கேயே நீங்கள் தங்கிவிடுவது நல்லது. இல்லாவிட்டால் இராஜ்யம் குட்டிச்சுவராய்ப் போய்விடும். நானும் உங்களுக்கு என்னால் முடிந்த உதவி செய்வேன். எங்கள் வீட்டில் விருந்தாளி வந்திருக்கிறான். அவனும் தங்களுக்கு உதவி செய்யக் கூடும்!" என்றாள்.

"அது யார் விருந்தாளி?" என்று குந்தவை கேட்டாள்.

"கடம்பூர் சம்புவரையர் மகன் கந்தன்மாறன். தாங்கள் அவனைப் பார்த்திருக்கிறீர்களா? தென்னைமர உயரமாய் வாட்டசாட்டமாய் இருக்கிறான். 'ஒற்றன்' என்றும், 'துரோகி' என்றும் ஓயாமல் பிதற்றிக் கொண்டிருக்கிறான். இராஜ துரோகத்தைப் பற்றிச் சற்று முன் சொன்னீர்களே? இராஜ துரோகத்தைக் காட்டிலும் பெரிய துரோகம் இன்னதென்று தங்களால் சொல்ல முடியுமா?"

"நன்றாய் சொல்ல முடியும். கைப்பிடித்த கணவனுக்குப் பெண்ணாய்ப் பிறந்த ஒருத்தி துரோகம் செய்தால் அது இராஜத் துரோகத்தைக் காட்டிலும் கொடியதுதான்!"

இப்படிச் சொல்லிவிட்டுக் குந்தவை தேவி நந்தினியின் முகத்தை உற்றுப்பார்த்தாள். அவள் எதிர்பார்த்த மாறுதல் ஒன்றும் நிகழவில்லை. நந்தினியின் முகத்தில் முன்போலவே மோகனப் புன்னகை தவழ்ந்தது.

"தாங்கள் சொல்வது ரொம்ப சரி ஆனால் கந்தன் மாறன் ஒப்புக் கொள்ள மாட்டான். 'எல்லாவற்றிலும் கொடிய துரோகம் சிநேகிதத் துரோகம்' என்று சொல்வான். அவனுடைய அருமை நண்பன் என்று கருதிய ஒருவன் ஒற்றனாக மாறிப் போனதுமல்லாமல் இவனுடைய முதுகில் குத்திப் போட்டு விட்டு ஓடிப்போய்விட்டானாம். அது முதல் கந்தன்மாறன் இவ்விதம் பிதற்றிக் கொண்டிருக்கிறான்!"

"யார் அவன்? அவ்வளவு நீசத்தனமாகக் காரியத்தைச் செய்தவன்?" "யாரோ வந்தியத்தேவனாம்! தொண்டை நாட்டில் திருவல்லம் என்னும் ஊரில் முன்னம் அரசு புரிந்த வாணர் குலத்தைச் சேர்ந்தவனாம்! தாங்கள் கேள்விப்பட்டதுண்டோ?"

(தொடரும்...)




## அன்பின் மதிப்பு



குணசீலன் என்கிற அரசன் ஒருவன் நோய் வாய்ப்பட்டு, பல நாட்களாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தான். அவனைப் பார்க்க தினமும் பல பிரமுகர்கள் வந்துகொண்டிருந்தனர்.

ஒருநாள், சில பெரிய மனிதர்கள் பலவித பழங்களைக் கொண்டு வந்து மன்னனிடம் கொடுத்துப் பேசிக்கொண்டிருந்தனர்.

அப்போது, ஒரு விவசாயி தன்னைத் தடுத்த காவலாளிகளையும் பொருட்படுத்தாமல், மன்னனின் படுக்கையருகே வந்து நின்றான்.

அவனது கலைந்த தலைமுடியும், ஆடையில் படிந்திருந்த தூசியும் அவன் தன் கிராமத்திலிருந்து வெகு தூரம் நடந்து வந்திருக்கிறான் என்பதை அறிவித்தன.

அவன் மன்னனிடம், "அரசே.. உங்கள் உடல் தேறவேண்டுமென்று எங்கள் ஊர் மாரியம்மனுக்குப் பொங்கல் படைத்தேன். அந்தப் பிரசாதத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஏற்றுக் கொள்ளுங்கள். அம்மன் பிரசாதத்தைச் சாப்பிட்டால் எந்த நோயும் பறந்து ஓடிவிடும்" என்றான்.

அவன் பிரசாதத்தை வெளியே எடுத்ததும் அது கெட்டுப் போன நாற்றம் அடித்தது. அங்கிருந்த பிரமுகர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டார்கள். முகம் சுளித்தார்கள்.

அரசனோ, பிரசாதத்தைப்பெற்றுக் கொண்டு, தன் கழுத்தில் இருந்து முத்துமாலையைக் கழற்றி எடுத்து, அந்த விவசாயிக்கு பரிசளிக்க அளித்து அனுப்பினான்.

மன்னனுக்கு வேண்டிய பிரமுகர் ஒருவர், "அரசே, கெட்டுப் போன பொங்கலுக்கா முத்து மாலை பரிசு?" என்று கேட்டார். மன்னனோ, "அது கெட்டிருந்தாலும் அந்த பிரசாதத்தை நான் சாப்பிட்டுக் குணமடைய வேண்டும் என்று விரும்பி கள்ளங்கபடமற்ற மனதுடன் தன் கிராமத்திலிருந்து ஒரு வாரம் நடந்து வந்திருக்கிறான்.

அவனது அன்பு உண்மையானது. போலித்தனம் இல்லாதது. உண்மையான அன்புக்கு மதிப்பு மிக அதிகம். நான் அளித்த முத்துமாலை கூட அவனது அன்புக்கு ஈடாகாது" என்று கூறினான்.

நமது அன்பு உண்மையாக இருந்தால், கடவுளே கையைக் கட்டிக் கொண்டு, நமக்கு சேவை புரிய வந்து நிற்பார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கொடுமைகளுக்கு இடையே
உண்மை வெற்றி பெறும்.
- ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்து கழுவாய் தேடுங்கள்

தமிழில் கழுவாய் என்றொரு சொல் உண்டு. கழுவாய் என்பது செய்த பிழைகளுக்காகப் பிராயச்சித்தம் செய்தல் என்று பொருள் உரைப்பர்.

ஆம், இலங்கை ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்குச் செய்த கொடுமை கொஞ்சமல்ல.

அன்று தொடக்கம் இன்றுவரை தமிழினத்தை அவர்கள் கொடுமைப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள்.

காலத்துக்குக் காலம் இனக் கலவரத்தை ஏற்படுத்தி தமிழ் மக்களைக் கொன்றொழிக்கும் கயமைத்தனம் 2009ஆம் ஆண்டில் பேயாட்டம் ஆடியது.

பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்.

தவிர, படையினரிடம் சரணடைந்தவர்களுக்கு நடந்தது என்ன? என்பது இன்னமும் தெரியாமல் உள்ளது.

இதற்கும் மேலாக இந்த நாட்டின் பேரினவாத ஆட்சியாளர்கள் செய்த மிக மோசமான கொடுமை அப்பாவித் தமிழ் இளைஞர்களைக் கைது செய்து விளக்கம் விசாரணையின்றி அவர்களைப் பல ஆண்டுகளாகச் சிறையில் அடைத்து வைத்திருப்பதாகும்.

உண்மை. பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி தமிழ் இளைஞர்களைச் சிறையில் அடைத்து சித்திரவதை செய்து அவர்களை வாழவிடாமல் தடுத்து வைத்திருப்பதென்பது மிகமோசமான மனித வதை.

அக்கொடும் செயலை இலங்கை ஆட்சியாளர்கள் செய்து கொண்டே இருக்கின்றனர்.

ஆம், வனப்பு மிகுந்த இலங்கை திருநாடு இன்று வறுமையிலும் பஞ்சத்திலும் தள்ளாடுகின்றதெனில் அதற்கான காரணம் என்ன? என்பதை அரசாங்கம் ஆராய வேண்டும்.

அவ்வாறு ஆராய்ந்தால், அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்ததும் சரணடைந்தவர்களை காணாமல் ஆக்கியதும் வாழ வேண்டியவர்களைச் சிறையில் அடைத்து அவர்களை மிகமோசமாக வதைப்பதுமே இலங்கையைத் தரித்திர நாடாக ஆக்கிற்று என்பது கண்டறியப்படும்.

எனவே ஆட்சியாளர்கள் எத்தனை கூட்டங்களை நடத்தினாலும் இலங்கையின் பொருளாதாரத்தை நிமித்த முடியாதென்பது நிறுதிட்டமான உண்மை.

ஆக, இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி என்பது தமிழ் மக்களுக்குச் செய்த பாவத்தின் விளைவு.

ஆம், அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றோ செல்வத்தைத் தேய்க்கும் படை என்பான் தெய்வப் புலவன் வள்ளுவன்.

ஆக, இந்த நாட்டின் ஆட்சிப்பீடமும் படைத்தரப்பும் பௌத்த பீடமும் தமிழ் மக்களுக்குச் செய்த பாவங்கள் கன்ம வினையாக ஒன்று திரண்டு இந்த நாட்டின் செல்வத்தை தேய்த்து நாட்டைக் கந்தறு நிலைக்கு ஆளாக்கியுள்ளது.

இதற்கும் மேலாக, இந்த நாட்டை விட்டு புத்திஜீவிகளும் இளம் சமூகமும் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு ஒரு நாட்டில் இருந்து புத்திஜீவிகளும் உழைப்பாளர் படையும் வெளியேறுமாயின், அதன் விளைவு எவ்வாறாக இருக்கும் என்பதை உணர்ந்தேனும் இந்த நாட்டின் ஆட்சிப்பீடம் தமிழ் மக்களுக்குச் செய்த பாவங்களுக்காகப் கழுவாய் தேடவேண்டும்.

அதில் ஒன்றுதான் அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வதாகும்.

உடனடியாகச் செய்யக்கூடிய தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை அரசாங்கம் செய்யாதவரை இந்த நாடு உருப்படமாட்டாது.

# நாட்டின் பொருளாதார பாதிப்புக்கு ரணிலும் பொறுப்புக் கூற வேண்டும்

## விமல் வீரவன்ச எம்.பி

(கொழும்பு)

பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்ஷர்கள் மாத்திரமல்ல தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்புக் கூற வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக் கிழமை இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

பொருளாதார பாதிப்பு தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு தொடர்பில் அமைச்சர் பந்துல குணவர்தன சபையில் கருத்து தெரிவிக்கிறார். சட்ட புத்தகத்தில் உள்ள விடயங்களை குறிப்பிட்டுக் கொண்டு நீதிமன்றத்தின் தீர்ப்பில் இருந்து விடுபட முயற்சிக்க வேண்டாம்.

எழுதப்பட்டுள்ள சட்டங்கள் முழுமையாக செயற்படுத்தப்படுவதில்லை என்பதற்கு இரண்டு உதாரணங்களை குறிப்பிடுகிறேன். கிரிக்கெட் நிறைவேற்று குழுவை நீக்கி இடைக்கால குழுவை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நியமித்தார்.

அமைச்சரால் நியமிக்கப்பட்ட இடைக்கால குழு தொடர்பில் ஆராய ஜனாதிபதி இடைக்கால குழுவை நியமித்தார். குழுவின் பரிந்துரையை தொடர்ந்து இனிவரும் காலங்களில் அமைச்சரவையின் அனுமதி இல்லாமல் இடைக்கால குழுக்களை நியமிக்க முடியாது என தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் சட்டத்தில் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியின் போது இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொரகொட ரூபாவின் பெறுமதியை தளம்பல் நிலைக்கு முழுமைப் படுத்துங்கள் அப்போது தான் இந்தியா அடுத்தக்கட்ட கடனுதவியை வழங்கும் என்றார்.

இவ்விடயம் தொடர்பில் கோட்டாபய ராஜபக்ஷ மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி ஆம் "ஏக நல்லம்" என்று குறிப்பிட்டார். இவ்விடயத்தை கோட்டபய ராஜபக்ஷ அமைச்சரவைக்கு அறிவிக்கவில்லை. குறைந்தபட்ச அளவேனும் இருந்திருந்தால் அவர் அதனை பாராளுமன்றத்துக்கு அறிவித்திருப்பார். ஆனால் அறிவிக்கப்படவில்லை.

2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேச பிணைமுறியங்களிடமிருந்து 13 பில்லியனுக்கும் அதிகமான கடன் பெற்றார். இதன் தாக்கம் பிற்பட்ட அரசாங்கத்துக்கு செல்வாக்கு செலுத்தியது. ஆகவே பொருளாதார பாதிப்புக்கு ராஜபக்ஷர்களை போல் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பொறுப்புக் கூற வேண்டும் என்றார். (ம-7)

## தேசிய கல்வியியற் கல்லூரியில் முத்தமிழ் விழா - 2023

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நாளை மறுதினம் திங்கட்கிழமை இரு அமர்வுகளாக முத்தமிழ் விழா நடைபெற உள்ளது.

இவ்விழாவிற்கு கல்லூரியின் பீடாதிபதி சுப்பிரமணியம் பரமானந்தம் அவர்கள் தலைமைதாங்குவதோடு, காலை அமர்வில் பேராசிரியர் கா.சிவத்தம்பி அரங்கிற்கு பேராதனைப்பல்கலைக் கழகத்தின் தகைசார் பேராசிரியர் மகேஸ்வரன் அவர்களும் மாலை இடம்பெறும் நிகழ்விற்கு நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அரங்கிற்கு தென்கிழக்குப்பல்கலைக்கழகத்தின் மொழியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ரகுபரன் அவர்களும் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்தோடு முதலாம் இரண்டாம் வருட ஆசிரியமாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற உள்ளன.

இந் நிகழ்வில் பெருமளவில் மாணவ ஆசிரியர்களும் பாடசாலை மாணவர்களும் பொது மக்களும் பங்குபற்ற உள்ளனர்.

அத்தோடு முத்தமிழ் விழாவையொட்டி நடைபெற்ற பேச்சுபோட்டி, விவாதப்போட்டி கவிதைப்போட்டி, இசைப்போட்டி, நடனப்போட்டி ஆகியவற்றில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட இருக்கின்றன. (ம-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2023**
**"இந்த உலகத்தில் அழகானது எதுவும் இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள்.எப்போதும் உங்களை ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு ஒரு மரத்தின் தோற்றத்தில் ஒரு இலையின் அசைவில் ஏதோவொன்று இருக்கும்"**
*- அல்பேட் சுவைற்சர்(பிரான்ஸ் தத்துவவியலாளர்- சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்)*

## எரிபொருள் இருப்புக்கான அனுமதி வழங்கப்படவில்லை

## காஞ்சன

(கொழும்பு)

தரமற்ற எவ்வித எரிபொருள் இருப்புக்களையும் இலங்கையில் தரையிறங்குவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் கஞ்சன விஜேசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொலன்னாவை மற்றும் திருகோணமலை எரிபொருள் சேமிப்பு கிடங்குகளுக்கு எரிபொருளை இறக்குவதற்கு உரிய முறைப்படி அந்தந்த எரிபொருள் நிறுவனங்கள் செயற்பட்டுள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார்.

எரிபொருளின் தரத்திற்கு இணங்குவது தொடர்பில் அமைச்சு என்ற ரீதியில் பொறுப்பேற்பதாகவும் இலங்கைக்கு தரக்குறைவான எரிபொருள் கொண்டு வரப்பட்டுள்ளதாக பல்வேறு ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் அனைத்தும் பொய்யானவை என்றும் எரிபொருளின் தரத்தில் பிரச்சினை இல்லை, எதிர்க்கட்சித் தலைவர் பயன்படுத்தும் வார்த்தைகளில்தான் பிரச்சினை உள்ளது என அமைச்சர் குறிப்பிட்டார். (5-6)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ்.பிரதேசத்தில்** ஏழாலை பிரதிப்பொது முகாமையாளர் அலுவலகம் - மின்சார சபை, ஆளுநர் விடுதி, யாழ் மாவட்ட செயலகம், துளசி மஹால், யு.எஸ் விடுதி, மருத்துவமனை வீதி, கச்சேரி நல்லூர் வீதி, முலவை, பழைய பூங்கா வீதி -கொழும்புத்துறை வீதி சந்தி,அரசடி சந்தி- சங்கானை, சங்கானை சந்தை, நிச்சாமம், வல்லை வீதி- சங்கானை ஐஸ் தொழிற்சாலை சுப்பர் மடம், பாரதிதாசன்- வாசிகசாலை, இன்பருட்டி, இன்பருட்டி பிள்ளையார் கோவில், முத்துமாரியம்மன் கோவில் அல்வாய், நாவலடி, ஸ்ரீலங்கா பாடசாலையடி, வியாபாரி மூலை ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** மணவாழப்பட்டு முறிப்பு, சின்னசாளம்பன் (14 ஆவது மைல் கல்) ஆகிய பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியில் இருந்து தப்பிக்க சர்வதேச நாணய நிதியம் செய்த பரிந்துரைகள் பற்றிய ஒரு மேலோட்ட பார்வை

02



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

எனவே, அரசு செலவினங்களுக்கும் பயன்படுத்த முடியும் என்பது சிறப்பு. அதன்படி, இந்த பணம் அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க பயன்படுத்தப்படுகிறது.

இந்த சர்வதேச நாணயநிதியத்தின் ஒப்புதலைப் பெறுவதும் அதற்கேற்ப பணத்தைப் பெறுவதும் பல வழிகளில் எங்களுக்கு மு்க்கியமானது. இதில் முக்கிய விடயம் என்னவென்றால், நம் நாட்டில் சர்வதேச நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டு, கடன் நிலைத் தன்மைக்கான உத்தரவாதத்தை இதன் மூலம் பெறுகிறோம். அதன்படி நாம் வங்குரோத்து நாடாக இல்லை என ஜனாதிபதி குறிப்பிட்டார். திவாலான நாட்டிற்கு யாரும் உதவுவதில்லை என்பது அவரின் கருத்து.

மேலும் சர்வதேச நாணய நிதியத்தின் இந்த கடன் வசதியின் ஒப்புதலின் மூலம், நாங்கள் மற்ற உதவிகளைப் பெறமுடியும். அதாவது இதன் காரணமாக சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்புபட்ட உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் பல தரப்புத்துறைகளில் இருந்து கடன் பெறுவதற்கான அடிப்படைத் தேவையை இவ் ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன் மூலம் அந்தத் தேவை நிறைவேறியுள்ளது.

மேலும் சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்தப்பட்ட வேலைத் திட்டத்தின் காரணமாக, அரசாங்கம் சில நிதி ஒழுக்கங்களுக்கு அமைவாக பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்வதாக சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனைய நாடுகள் உட்பட சர்வதேச சமூகத்திற்கு நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது, சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு திட்டத்தில் நுழைவதன் மூலம் கட்டமைக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களின் நம்பகத்தன்மை காரணமாக, தனியார் போட்டி வட்டிவிகிதங்களில் மூலதனச் சந்தையில் இருந்து நிதியைப்பெறவும் முடியும்.

சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுவது மிகவும் கடினமான பணியாக இருந்தாலும், பொருளாதாரத்தில் பல அத்தியாவசிய மாற்றங்களை இதன் மூலம் ஏற்படுத்தமுடியும் என்பது வெளிப்படை.

எமக்கு சர்வதேச நாணய நிதியம் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் எமது பொருளாதாரத்தை சீர்செய்வதற்கு செய்ய வேண்டிய விடயங்கள் பல உள்ளன. வரி வருவாயை அதிகரிப்பது அரசாங்கம் செய்ய வேண்டிய செயற்பாடுகளில் ஒன்றாகும். இது பல்வேறு வழிகளில் செய்யப்படலாம். அடிப்படையில் விதிக்கப்படும் வரிகள் நியாயமானதாகவும், வரிசெலுத்துவோருக்கு மலிவாகவும் இருக்க வேண்டும். அதாவது பூவை நசுக்காமல் தேன் உண்ணும் குளவி போல ஒரு அரசு வரிவிதிக்க வேண்டும். எவ்வாறாயினும், கடந்த காலங்களில் விதிக்கப்பட்ட வரிகள் நியாய மற்றவை மற்றும்கட்டுப்படியாகாதவை என பல்வேறு தரப்பிலிருந்தும் கடும் எதிர்ப்புகள் எழுந்துள்ளன. இதனால் பல தொழில்சார் நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதாகவும் அறிய முடிகிறது.

மேலும், இந்த வரி உத்தரவுகளுக்கு எதிராக வேலை நிறுத்தம் போன்ற தொழில் முறை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடன் அரசாங்கம் கலந்துரையாடிய போதிலும், இது வரையில் இது தொடர்பில் உரிய தீர்வு அல்லது உடன்பாடு ஏற்படவில்லை.

எமது பொருளாதாரத்தை சீர்செய்வதற்கு கடன் வழங்குபவர்களிடம் இருந்து நிதிச் சான்றிதழ் பெற்றாலும், அவர்களுடன் அரசு பேச்சுவார்த்தை நடத்தி, கடன் நிவாரணம் பெறுவது குறித்து உடன்பாடு எட்ட வேண்டும். இச் செயற்பாடு ஆமை வேகத்தில் நடைபெற்று வருகிறது. கடனை நிலை நிறுத்துவதற்கும் நிதிப்பற்றாக்குறையை ஈடுகட்டுவதற்கும், இலங்கையின் கடனைத்திருப்பிச் செலுத்துவதற்கு வெளிநாட்டுக் கடனாளிகளிடமிருந்து சலுகைகள் மற்றும் பல தரப்புபங்காளிகளிடமிருந்து கூடுதல் நிதியுதவியும் நாட்டிற்கு தேவையாகும். மேலும் அதிக போட்டி மற்றும் ஏற்றுமதி அடிப்படையிலான பொருளாதாரத்தை உருவாக்க அரசாங்கம் இந்த கொள்கை மாற்றங்களை விரைவில் செயற்படுத்த வேண்டும்.

அதே சமயம் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் ஏழைகள் மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களை இலக்காகக் கொண்டு, பெரும்பான்மையான மக்கள் பொருளாதார நெருக்கடியில் சிக்குவதைத் தடுக்க வேண்டும்.

சர்வதேச நாணய நிதியம் வழங்கும் கடனைப் பெற இந்த ஆண்டு (2023) இறுதி வரை காத்திருக்க நேரிடலாம் என்று ஆரம்பத்தில் சிலர் தெரிவித்தனர். ஆனால் அதற்கு பதிலாக மார்ச் மாதத்தில் அதாவது இந்த ஆண்டின் முதல் காலாண்டில் இந்த கடன் வசதிக்கான சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்புதலைப் பெற முடிந்ததில் நாங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்.

இந்த மகிழ்ச்சிக்காக சிலர் பட்டாசுகளையும் கொளுத்தியுள்ளனர். பட்டாசுகள் கொளுத்தி கொண்டாடி இருப்பினும் இந்த அனுமதியை மேலும் தாமதப்படுத்தினால் என்ன நடந்திருக்கும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இந்த பணம் பெறுவதில் தாமதம் ஏற்பட்டால், இந்த சக்தி வாய்ந்த பரிமாற்ற நெருக்கடியில் நாம் சிக்கி, அதனால் பாதிக்கப்படும் காலம் நீண்டதாக இருந்திருக்கும்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை செயற்படுத்துவது மிகவும் கடினமானது மற்றும் சவாலானது என்பது உண்மை தான். இருந்தாலும் நாம் இப்போதே படிப்படியாக இந்தப் பரிமாற்ற நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான பயணத்தைத் தொடங்க வேண்டும். அதற்கு நாம் மிகவும் கடினமான தூரம் பயணிக்க வேண்டியிருக்கும். இதற்கு நாம் அதாவது நாட்டின் மிக உயர்ந்த குடிமகன் முதல் கீழ்மட்ட தொழிலாளி வரை குறிப்பிட்ட அளவு தியாகங்களைச் செய்ய வேண்டியிருக்கும்.

அதற்கு நாட்டின் ஜனாதிபதி, அமைச்சர்கள் உட்பட உயர்மட்ட மக்கள் அனைவரும் மேலிருந்து கீழ் வரை சரியான முன்னுதாரணமாக இருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் மக்களின் கச்சைகளை மட்டும் இறுக்கிப்பிடிக்கப் போவதன் மூலம் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவதில் நாளை பலத்த முரண்பாடுகள் உருவாகலாம் என்பதை அரசாங்கம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்தால் மட்டும் பொருளாதாரத்தைகட்டியெழுப்ப முடியாது. நமது பொருளாதாரத்தை நாமே கட்டியெழுப்ப வேண்டும்.

எனவே, சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்புக் கொண்டு செயல்படுத்தப்பட்ட திட்டத்தைத் தவிர, சர்வதேச நாணய நிதியம் சொன்னாலும் சொல்லா விட்டாலும், இந்த பேரழிவிலிருந்து மீள்வதற்கு நமது அரசாங்கமும் தனித் திட்டங்களை வைத்திருக்க வேண்டும்.

அவ்வாறான திட்டங்கள் ஏதும் இற்றைவரையில் இருப்பதாகத் தெரியவில்லை.

எமது பொருளாதார நெருக்கடி பற்றி ஆரம்பத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குனர் கிறிஸ்டலினா ஜார்ஜீவா பின்வருமாறு கூறியிருந்தார்.

நிறுவனங்கள் மற்றும் நிர்வாக கட்டமைப்புகளுக்கு ஆழமான சீர்திருத்தங்கள் தேவை. அதிக பணவீக்கம், குறைக்கப்பட்ட கையிருப்பு, தாங்க முடியாத பொதுக் கடன் மற்றும் உயர்ந்த நிதித்துறை அபாயங்களுக்கு மத்தியில் கடுமையான மந்த நிலைக்கு மத்தியில் இலங்கை பாரிய பொருளாதார மற்றும் சமூக சவால்களை எதிர்கொண்டுள்ளது.

நிறுவனங்கள் மற்றும் நிர்வாக கட்டமைப்புகளுக்கு ஆழமான சீர்திருத்தங்கள் தேவை. இந்த நெருக்கடியிலிருந்து இலங்கை மீள்வதற்கு, சீர்திருத்தங்களுக்கான வலுவான உரிமையுடன் கூடிய விரிவாக்கப்பட்ட கடன் வசதியினால் ஆதரிக்கப்படும் வேலைத் திட்டம் விரைவாகவும் சரியான நேரத்திலும் நடைமுறைப்படுத்தப்படுவது மிகவும் முக்கிய மானதாகும்.

பொதுவருவாயை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட நிதி நல்லிணக்கம் ஏழை மற்றும் பாதிக்கப்படக் கூடிய குழுக்களைப் பாதுகாக்கும் அதேவேளையில் நிதி மற்றும் கடன் நிலைத் தன்மையை மீட்டெடுக்க வேண்டும்.

அதன்படி, ஏற்கனவே நடைமுறையில் உள்ள முற்போக்கான வரி சீர்திருத்தங்கள் பராமரிக்கப் பட வேண்டும், அதே நேரத்தில் சமூக பாதுகாப்பு வலை பலப்படுத்தப்பட்டு ஏழைக் குழுக்களை இலக்காகக் கொள்ள வேண்டும். நிதிச் சீர்திருத்தங்கள் வெற்றிகரமாக இருக்க, வரிநிர்வாகம், நிதி மற்றும் செலவு மேலாண்மை மற்றும் எரிசக்தி விலை நிர்ணயம் ஆகியவற்றைக் கையாளும் நிதி நிறுவனங்களின் தொடர்ச்சியான சீர்திருத்தம் மிகவும் முக்கியமானது என்று கூறியிருந்தார்.

இலங்கையின் ஆளுகை செயன்முறையில் உள்ள குறைபாடுகள் பற்றி சர்வதேசநாணயநிதியத்தின் அவதானிப்புக்கள் என்னவென அதன் அறிக்கையில் கூறப்பட்டிருந்தது. அது பற்றி இப்போது பார்ப்போம். (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிக்மி சாரதி...

ததுடன் தாக்குதலும் நடத்தியுள்ளனர்.

குறித்த சம்பவம் திருநெல்வேலி பழம் வீதி அருகில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-7)

## பாம்பு தீண்டி...

யாழ்ப்பாணம் கைதடி மத்தியை சேர்ந்த அருச்சுனன் சுந்தரலிங்கம் (வயது-55) எனும் நபரே உயிரிழந்தவராவார்.

கடந்த 31ஆம் திகதி மனைவியுடன் தோட்டத்தில் புல்லு பிடுங்கிக்கொண்டிருந்தவேளை, இரத்த புடையன் பாம்பு அவரை தீண்டியுள்ளது.

அதனை அடுத்து ஆபத்தான நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு, கடந்த 16 நாட்களாக தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

அந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7,104)

## தனிச் சிங்கள...

தெரிவித்தார்.

நமக்கு நாம் மட்டுமே என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு நல்லிணக்கம் மனிதநேயத்தின் ஆரம்பம் என்ற நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசியல் நோக்கத்திற்காகவும் பொருளாதார நோக்கத்திற்காகவும் இனவாதமும் மதவாதமும் சமூகத்தில் பரப்பப்பட்டன.

இதனை அரசியல்வாதிகளும் தங்களின் அரசியல் இலாபத்திற்காக பயன்படுத்திக் கொண்டார்கள்.

இந்த நாடு வீழ்ந்தபோது, அனைவரும் ஒன்றிணைந்துதான் இந் நாட்டை மீட்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பேச்சில் மட்டுமன்றி, செயற்பாட்டிலும் எமது ஐக்கியத்தை நாம் காண்பித்துள்ளோம்.

எதிர்காலம் குறித்து மட்டும் குறை கூறிக் கொண்டிருக்காமல், புதிதாக சிந்திக்கும் ஒரு சமூகத்தை நாம் உருவாக்க வேண்டும்.

1956இல் தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்துதான், இந்நாடு பல இனவாத மோதல்களுக்கு முகம் கொடுத்தது.

இங்குதான் நாம் பிரிந்தோம். இதன் பின்னர்தான் ஆயுதம் ஏந்தப்பட்டு, கொடிய யுத்தமும் நாட்டில் ஏற்பட்டது.

இவைதான் நாடு முன்னேற்றமடைய தடையாக இருந்தன.

1956இற்குப் பின்னர் நாட்டை விட்டு பல புத்திஜீவிகள் வெளியேறினர். 1983இலும் 2022இலும் இதே போன்று புத்திஜீவிகள் உள்ளிட்டவர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.

நாம் நம்மை உணராத காரணத்தினால்தான், அடுத்தவரின் குறைகளை பெரிதாகக் காண்கிறோம்.

நாம் ஏனையவரின் மத, இன, கலாசாரத்தை மதித்தால் மட்டுமே, இந் நாட்டை முன்னேற்ற முடியும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## மரக்கிளை...

வதுபோல் மனைவிக்குப் பாசாங்கு செய்தவேளையிலேயே இவ்விபரீதம் இடம்பெற்றுள்ளது.

இரு பிள்ளைகளின் தந்தையான 26 வயதுடைய நபரே நேற்று முன்தினம் இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நெடுந்தீவுப் பகுதியில் வசிக்கும் இளம் குடும்பஸ்தர் ஒருவர் மனைவியுடன் பேசியவாறு, தான் தற்கொலை செய்வேன் என வேப்பமரத்தில் தூக்கிட்டு பாசாங்கு செய்த வேளை மனைவி அதனைக் கண்ணுற்று எள்ளி நகையாடியுள்ளார்.

இதனால் அந்தக் குடும்பஸ்தர் தூக்கை மாட்டியவாறு மரத்தில் இருந்து கீழே இறங்க முற்பட்ட வேளை வேப்ப மரக்கிளை முறிந்துள்ளது. அந்தக் குடும்பஸ்தரும் உண்மையிலேயே தூக்கில் அகப்பட்டுள்ளார்.

இதன்போது அவர் அதில் இருந்த தப்ப முடியாது தவித்த வேளை அவரைக் காக்கும் நோக்கில் மனைவி காலைப் பிடித்தவாறு அவலக் குரல் எழுப்பியபோதும் அருகில் எவருமே இல்லாத நிலையில் உடன் எவரும் அவ்விடத்துக்குச் செல்லவில்லை.

இந்நிலையில், குடும்பஸ்தர் அந்த இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தார்.

அவரது சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் மனைவியிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7)

## சிறந்த பெறுபேறு...

அனைவருக்கும் நன்றி கூற வேண்டும் என்றும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பெறுபேறுகளின் அடிப்படையில் 198 புள்ளிகளை 5 மாணவர்களும் 197 புள்ளிகளை 4 மாணவர்களும் 196 புள்ளிகளை 8 மாணவர்களும் பெற்றுள்ளனர்.

மேலும் கல்வி மறுசீரமைப்புக்கான அனுமதி கிடைக்கப் பெறும்போது, தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின்போது மாணவர்களுக்கு ஏற்படும் தாக்கங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கூறியுள்ளார். (ம-7)

## தரம் 5...

மேலான புள்ளிகளைப் பெற்று சித்தியெய்தி (70%) சாதனை படைத்துள்ளனர். இரு மாணவர்கள் 187 இனை உயர் புள்ளியாகப்பெற்றிருப்பதுடன், 226 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று 97 வீதத்தினையும், 233 மாணவர்கள் 70 புள்ளிகளுக்கு மேலாகப் பெற்று 99.6 வீதத்தினையும் பெற்றுள்ளனர் என யாழ். புனித ஜோண் பொஸ்கோ அதிபர் அருட் சகோதரி மேரி அஞ்சலிக்கா தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ். இந்து ஆரம்ப பாடசாலையில் 266 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி 161 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேலாக பெற்று சித்தி அடைந்துள்ளனர். இது 61% சித்தியாகும். (ம-7,33,104)

## சுழிபுரம்...

தற்காக அந்த பகுதிக்கு சென்று, பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரை கைது செய்ய முற்பட்டனர்.

இதன்போது அங்கிருந்தவர்கள் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் அந்த பகுதியில் பதற்றம் நிலவியது. (ம-7,104)

## குப்பிளானில்...

அவரது சடலம் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். பிரேத பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7,104)


தன நிதானய
திகதி - 2023.11.17
சீட்டிழுப்பு இலக்கம் - 1331
Z 21 24 49 78 Z
Double Chance 19817

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3543
சீட்டிழுப்பு திகதி 17.11.2023
F 16 47 54 74
F 36480
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.11.17
சீட்டிழுப்பு இலக்கம் 610
மிதுனம் 30 38 41 50 மிதுனம்
48285 20

மஹஜன சம்பத
திகதி 2023/11/17
சீட்டிழுப்பு இலக்கம் 5301
U 2 6 4 0 3 4
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 17/11/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1649
I 26 44 60 62 67
72255

Lucky 7 லக்கி
திகதி 17.11.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0127
L7 இலக்கம் 1 5
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
கும்பம் 8 1 8 4 6 0

உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 17.11.2023 வெற்றி வாரம் 009
P 1 9 5 2 6 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,473,491.20
DLB
தொலை பேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2275 வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.11.17 தினம் வெள்ளிக்கிழமை
09 13 48 59 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,738,324/-

சனிதா Shanida
திகதி 2023.11.17 வெற்றி வாரம் 4436
04 47 49 63 Z
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,141,844.00

சசிரி
403
2023.11.17
பச்சை
07 20 32
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,885,120/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3987 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.11.17 தினம் வெள்ளிக்கிழமை
03 24 39 60 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,000,000/-

கப்பர்க
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 23 03 08 16 17
1451
2023.11.17 வெள்ளி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 466,267,594.20
DLB தொலை பேசி 011-2 333 546-47

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2101
சீட்டிழுப்பு திகதி: 2023.11.17
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,807,376/-
அத கோடிபதி ADA KOTIPATHI
20 35 38 47 S


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட பகுதி வாடிக்கையாளர்களுக்கு!

Ark Enterprises(Pvt) Ltd (ஆர்க் என்ரபிறைசஸ் பிறைவேட் லிமிடெட்) ஆகிய நாமத்தைக் கொண்ட எமது நிறுவனம் இனிவரும் காலங்களில் Ark.N.Company(Pvt) Ltd (ஆர்க். என்.கம்பனி பிறைவேட் லிமிட்டெட்) எனும் நாமத்துடன் முன் எடுத்துச் செல்லப்படும் என்பதனை எமது அன்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

"இதுவரை எம்மை நேசித்தவர்களே இன்னும் அதிகமாக நம்பிக்கை வையுங்கள் நாங்கள் உங்களோடு"

நிர்வாகம்
Ark.N.Company(Pvt) Ltd,
150, Stanley Road, Jaffna.
(17895)

## IELTS - New Batch ஆரம்பம்

இத்துடன் Basic & Advance Grammar Classes.
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (17871)

## கச்சான் உற்பத்தியாளர்களுக்கு...

சீனாவில்(China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கச்சான் கோது உடைக்கும் இயந்திரம் 1 மணித்தியாலத்திற்கு 400Kgs மற்றும் 800Kgs உடைக்கக்கூடியது அத்துடன் கச்சான் பயிருக்கான ஜிப்சம்(GYPSUM) $CaSO_4.2H_2O$ தாய்லாந்திலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்டு விற்கப்படுகிறது. விவசாயிகள் வாங்கி பயன் பெறுங்கள்.



**ஆர்க். என். கம்பனி**
102, K.K.S, வீதி, யாழ்ப்பாணம். 021 222 3155
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9, வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020
A9 வீதி,எழுதுமட்டுவாள். 070 191 3571
HotLine : 071 535 7799/ 071 973 9917
(17913)

## Pearson International College

**Applications are called for English teachers & IELTS tutors**

- Candidates should have minimum HND in English or any other academic qualification in english medium
- previous IELTS score above or equal to 6.5 is recommended (not necessary)
- Prior teaching experience would be an added advantage
- Weekends and weekdays shifts are available.

Email your CV within three days of thisadvertisement to Pearsoncollege 2020@gmail.com, admin@picsl.lk
**Call +94 74 188 7878 for more info**
No.21,3rd Lane, Power house Road, Jaffna.
(C-7662)

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

VISA
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜேர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777
(C-7663)

## IELTS

Need to do IELTS for Study Abroad, Skilled Migration and other purposes? Contact the professionals on the cutting edge in Jaffna.
RM Associate Facilitators (17923)
077 768 7821 spraj54@gmail.com

## வாடகைக்கு

கண்டி வீதி சாவகச்சேரி மொடன் வைத்தியசாலைக்கு முன் சாவகச்சேரி பக்கம் 3 ஆவது வீடு சிவன் கோவில் சந்திக்கு அருகில் மிகப் பெரிய வீடு சகல வசதியும் உண்டு. வகனத் தரிப்பிடமும் உண்டு. நல்ல தண்ணீர் உண்டு. (17901)
021 221 3590
074 252 6691

## CANADA VISITOR VISA

VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7663)
0777-068-777
49A,சப்பல் லேன். யாழ்ப்பாணம் V2 TRAVELS

## காணி விற்பனைக்கு உண்டு

GOLDEN Real Estate

**யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A9 வீதி முகப்புடன் 51 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு, நன்னீரூற்று
- சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
- 18 அடி பாதை
- யாழ். பஸ் நிலையத்திலிருந்து 6 km தூரம்
- நல்லசூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணிவீடு கட்டுவதற்கும்,
- களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் உகந்த இடம் பரம்பறைக்காணி, பல வருடகால தோம்பு, தூய உறுதி
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் காலை 06.00 - மாலை 06.00 மணிவரை

(17916)
**071 173 3911,**
**076 853 5022, 076 213 7239**

## காணி விற்பனைக்கு

யாழ். மயிலிட்டியில் பொன்னாலை - K.K.S - பருத்தித்துறை கரையோர காப்பற் வீதியில் இருந்து 200m தூரத்தில் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
விலை 1 பரப்பு 16 இலட்சம்
தொடர்புகளுக்கு (17868)
075 521 3533

## வீடு வாடகைக்கு உண்டு

அரசடி வீதி, நல்லூர் 1 ஆம் ஒழுங்கையில் சிறு குடும்பத்திற்கு ஏற்ற 3 றூம் சமையலறை, கோல் சகல வசதிகளுடனும் உண்டு.
தொடர்புகளுக்கு (17909)
076 752 7853

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg கோதுமை மா | - 181/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 189/= | |
| 1 Kg றவை | - 289/= | |
| 1 Kg அரிசி மா | - 189/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 299/= | (max 2Kg) |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 446/= | (max 3Kg) |
| 1 Kg நீட்டல் பச்சை | - 170/= | |
| 1 Kg குத்தரிசி (ஆட்டக்காறி) | - 199/= | |
| 400g அங்கர் பால்மா | - 1025/= | ~~(1080/=)~~ |
| 180ml Chik Shampo | - 370/= | ~~(480/=)~~ |
| 330g கோலட் மாரி பிஸ்கட் | - 275/= | ~~(330/=)~~ |
| 70g பேபி சோப் | - 108/= | ~~(145/=)~~ |
| 01 சந்தூர் சோப் | - 140/= | ~~(175/=)~~ |
| 1 L தேங்காய் எண்ணெய் (bulK) | - 575/= | |
| 1 L மரக்கறி எண்ணெய் (bulk) | - 560/= | |

1025/=


~~1080/-~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.
பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
Happy Supermarket
0777 8080 30
(17922)




## 14 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
# காசிப்பிள்ளை செல்லத்துரை

தோற்றம் : 03.02.1939
மறைவு : 23.10.2009

உலகத்தில் எத்தனை சொந்தங்கள் இருந்தாலும்
எம் கண்கள் தேடுவது... அப்பாவை மட்டுமே!
ஆண்டுகள் பல கோடி ஆனாலும்
உங்கள் நினைவுகளுடனும்
உங்கள் வழிகாட்டலுடனும் வாழ்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
டச்றோட், உடுவில். (17915)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org